திருமுல ஔவையார் அருளிய நல்வழி மூலமும் உரையும்

உரையாசிரியர்

திரு.அடிகளாசிரியர்

திருமூல ஔவையார் அருளிய

நல்வழி மூலமும் உரையும்

உரையாசிரியர்

திரு. அடிகளாசிரியர்

ஓய்வுபெற்ற தமிழ்ப் பேராசிரியர்

சித்தநாதேச்சுராதீனம்

குகையூர் – அஞ்சல்–606 306

விழுப்புரம் மாவட்டம்

பதிப்பாசிரியர்

சோதிடரத்னா

முனைவர் அ. சிவபெருமான்

4சி, வெள்ளிவிழாச் சாலை

செயங்கொண்டசோழபுரம் – 621 802

பெரம்பலூர் மாவட்டம்

குகையூர் சித்தநாதேச்சுராதீனத்
திருவருள் நிலையத்தின்
ஆன்மநலப்பணி வெளியீடு-6

நூல் குறிப்பு

நூல் பெயர் : திருமூல ஔவையார் அருளிய நல்வழி மூலமும் உரையும்.

ஆசிரியர் : திரு அடிகளாசிரியர்

பதிப்பு : முதல் பதிப்பு 13—12—1999

உரிமை : திரு. அடிகளாசிரியர்

அளவு : டிம்மி 1/8

பக்கங்கள் : 98

விலை : ரூ. 25–00

படிகள் : 1000

வெளியீட்டாளர்: திருவருள் நிலைய வெளியீட்டகம்
குகையூர் - அஞ்சல்,
நயினார்பாளையம் – வழி,
கல்லக்குறிச்சி – வட்டம்
விழுப்புரம் மாவட்டம் – 606 306

அச்சிட்டோர் : சுபம் பிரிண்டர்ஸ்,
சுப்பிரமணியம் தெரு, சிதம்பரம்.

குகையூர்த் தமிழ்ச்சங்கத்தின் தொண்டாக
வெளிவரும் முதல் வெளியீடு

பொருளடக்கம்

பதிப்புரை

வேண்டுகோள்

அணிந்துரை

உரையாசிரியரின் உரை

குகையூர்த் தமிழ்ச்சங்கக் கட்டட நிதிக்கான இலக்கிய வெளியீட்டிற்குப் பொருள் வழங்கிய கொடையாளர்.

திருமூல ஔவையார் அருளிய நல்வழி மூலமும் உரையும் 1 — 72

நல்வழிப் பாடல்களின் முதனினைப்பு அகரவரிசை 73 — 74

பிழை திருத்தம் 74

பேராசிரியர் திரு, அடிகளாசிரியரின் வாழ்வும் பணியும் 75 — 80

வேண்டுகோள்

திருமூல ஔவையார் அருளிய நல்வழி மூலமும் உரையும் என்னும் இவ்விலக்கியத்தைக் குகையூர் தமிழ்ச் சங்கக் கட்டடநிதிக்காக எழுதி அச்சிட்டு வெளியிட்டுள்ளேன். இனி, இவ்விலக்கியத்தைத் தமிழ் மக்களிடத்தே விற்பனை செய்து பொருள் திரட்ட வேண்டும். ஆனால், இவ்வாறு கிடைக்கும் தொகை தமிழ்ச்சங்கக் கட்டடம் கட்டுவதற்கு வேண்டிய அளவு இருக்காது. இருப்பினும் ஒளிபடைத்த உள்ளத்தைப் பெற்றுள்ள தமிழ்நாட்டு மக்கள் துணையுடன் பொருள் திரட்ட முயல்கின்றேன்.

நிதி மிகுந்தவர் பொற்குவைதாரீர்;
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்;
அதுவும் அற்றவர் வாய்ச்சொல் அருள்வீர்;

என வணங்கிக் கேட்டுக் கொள்கின்றேன்,

குகையூர்
10—2—1999

இங்ஙன்
திரு. அடிகளாசிரியன்

பதிப்புரை

தமிழ்நா டெங்கும் தடபுடல் அமளி
யணமே எங்கணும் பறக்குது விரைவில்
குவியுது பணங்கள்; மலைபோற் குவியுது!!
தமிழின் தொண்டர் தடுக்கினும் நில்லார்
ஓடினார், ஓடினார் ஓடினார் நடந்தே!
ஆயிரம் ஆயிரத் தைந்நூறு பெண்கள்
ஒளிகொள் விழியில் உறுதி காட்டி
இறக்கை கட்டிப் பறக்கின் றார்கள்!
ஐயோ, எத்தனை அதிர்ச்சி, உத்ஸாகம்!
சமுத்திரம் போல அமைந்த மைதானம்
அங்கே கூடினார் அத்தனை பேரும்
குவித்தனர் அங்கொரு கோடி ரூபாய்
வீரத்தமிழன் வெறிகொண் டெழுந்தான்
உரக்கக் கேட்டான் உயிரோ நம்தமிழ்?
அகிலம் கிழிய ஆம்! ஆம்! என்றனர்
உள்ளன்பு ஊற்றி ஊற்றி ஊற்றித்
தமிழை வளர்க்கும் சங்கம் ஒன்று
சிங்கப் புலவரைச் சேர்த்தமைத் தார்கள்!

— பாரதிதாசன்

தமிழ் மொழி, தமிழ் இனம் முன்னேற்றத்தைக் கருதி எங்களால் நிறுவப்பெற்ற குகையூர்த் தமிழ்ச் சங்கக் கட்டட நிதிக்காக இந்நூல் அச்சிடப்பெற்று வெளியிடப் பெறுகின்றது. குகையூர்த் தமிழ்ச் சங்கக் கட்டடத்தைக் கட்டுவதற்குப் பொருள் வேண்டும். அப்பொருளை எவ்வாறு திரட்டலாம் என்று கருதிய பொழுது, சங்கத் தலைவராகிய எனது தந்தையார் பேராசிரியர் திரு. அடிகளாசிரியரவர்கள் ஒரு கருத்தைக் கூறினார். தமிழ்ப் பாட்டியாகிய ஔவையார் எழுதிய நல்வழி என்னும் நல்ல நூலுக்குப் பாடபேதங்களுடன் கூடிய மிகச்சிறந்த உரை

ஒன்றை எழுதி அச்சிட்டு அதனைத் தமிழ்நாட்டு மக்களிடம் எடுத்துச் சென்று கொடுத்து அதன் வழியாகப் பொருள் திரட்டலாம் என்ற கருத்தே அவர் கூறியதாகும். அவர் கூறியவாறே இந்நூலை அச்சிட்டு வழங்கியுள்ளேன். எனவே, இதனைக் காணும் தமிழன்பர்கள் அனைவரும் உதவுவார்கள் என்பது எங்களது எண்ணமாகும்.

குகையூர்த் தமிழ்ச் சங்கத்தை நிறுவுவதற்குரிய சட்ட திட்டங்களை வகுத்து உதவியதோடன்றி அதனைச் செயலாக்கம் செய்தும், இந்நூலிற்கு அரிய அணிந்துரை வழங்கியும் சிறப்பித்த எனது சிறிய தந்தையார் **புலவர் திரு. க. சுப்பிரமணியம்** அவர் கட்டு நன்றி.

இந்நூலின் அச்சகச்செலவு முழுமையையும் அன்போடு ஏற்றுக்கொண்டு பொருளுதவிய எனது பெரிய தந்தையார் அவர்களின் புதல்வராகிய **திரு. தெ. சுப்பிரமணியம்** அவர்கட்கு நன்றி.

மேலும் நூல் உருவாக்கத்திற்கு உதவிய எனது அண்ணார் **திரு. அ. இளங்கோவன்**, அவர்கட்கும், எனது சகோதரியின் புதல்வன் **திரு. அ. மோகனசுந்தரம்** அவர்கட்கும், எனது குடும்பத்தார்களுக்கும் நன்றி.

இந்நூலை அச்சிட்டு வழங்கிய சிதம்பரம் **சுபம் அச்சகத்** தாருக்கும், அட்டையின் முகப்பு ஓவியத்தை வரைந்த எனது நண்பர் **சிதம்பரம் சேது** அவர்கட்கும் மெய்புத் திருத்திய புலவர் இரா. கணபதி அவர்கட்டும், வேறுபல உதவிகள் செய்த உடன் பிறவா இளவல் **த. சோதி இராமலிங்கத்திற்கும்** நன்றி.

செயங்கொண்டம்
10—12—99

இங்ஙன்
அ. சிவபெருமான்

பெங்களூர் தமிழ்ச் சங்க முன்னாள் தலைவரும்,
குகையூர்த் தமிழ்ச்சங்க நிர்வாக உறுப்பினரும் ஆகிய

புலவர் கூ. சுப்பிரமணியம்

அவர்கள் எழுதிய

அணிந்துரை

பாரத நாட்டுள் தமிழகத்தில் விழுப்புரம் மாவட்டத்தில் கல்லக்குறிச்சி வட்டத்தில் தென்கோடியில் வெள்ளாற்றின் வடகரையில் உள்ளது 'குகையூர்' என்னும் கூகையூராகும். இவ்வூர் பழமை வாய்ந்தது. மாலாங்கன் என்னும் சிற்றரசனால் பண்டு ஆளப்பட்டது.

ஐந்து சிவன் கோவில்களையும் மூன்று பிள்ளையார் கோவில் களையும் ஒரு பெருமாள் கோவிலையும் மாரியம்மன் கோவில் பிடாரியம்மன் கோவில் போன்ற கிராம தெய்வக்கோவில் களையும் உடையது. 'குகையூர் குடங்கைஅழகு' எனப் பாராட்டட்பெற்றது இவ்வூர்.

இவ்வூரில் அரசினர் மேல்நிலைப்பள்ளியும் அஞ்சலகமும் கூட்டுறவுக்கருவூலமும் உள்ளன. இதன் கிளைக்கிராமமாக வீரபயங்கரம் என்ற ஊர் அமைந்துள்ளது. இங்கு புகழ்பெற்ற ஐயனார் கோவில் உள்ளது. இவ்வூரில் கற்றறிந்த சான்றோர் பலர் வாழ்ந்துள்ளனர். பல்குடிப் பெருமக்களும் ஒற்றுமையாக வாழ்கின்றனர்.

மேற்கண்ட சிறப்பினைக் கொண்ட குகையூர் என்னும் கூகையூரில் 30—10—98 வெள்ளிக்கிழமை அன்று குகையூர் பொதுமக்கள் எல்லாம் இவ்வூரின் தெற்குத் தெருவில் உள்ள திருவருள் நிலையத்தில் ஒன்று கூடி, தமிழ் முன்னேற்றம் கருதித் தமிழ்ச் சங்கம் ஒன்று வைக்க வேண்டும் என்று முடிவு செய்தனர். அவர்கள் செய்த முடிவின்படி 30—10—98 அன்றே 'குகையூர்த் தமிழ்ச் சங்கம்' என்ற பெயரால் ஒரு அமைப்பு

தோன்றிற்று. அன்று கூடிய பொதுக் குழு கீழ்க்கண்ட செயற் குழுவினரை ஒரு மனத்துடன் தேர்வு செய்தது.

சங்கத்திற்குத் தலைவராக முதுபெரும் புலவர் பேராசிரியர் திரு. அடிகளாசிரியர் அவர்களையும் துணைத் தலைவராக ஊராட்சிமன்றத் தலைவர் மா. பெரியசாமி பி.ஏ. அவர்களையும் செயலாளராகக் கிராம நிர்வாக அலுவலர் உயர்திரு. மு. இராசமாணிக்கம் அவர்களையும் பொருளாளராக ஆசிரியர் உயர்திரு. முத்துக்கருப்பன் எம்.ஏ. அவர்களையும் துணைச் செயலாளர்களாகத் திருவாளர்கள் சி. முத்துசாமி, சி. முருகேசன் அவர்களையும் செயற்குழு உறுப்பினர்களாகத் திருவாளர்கள் அ. நச்சினார்க்கினியன் எம்.ஏ; பி.எட். இரா இரவிச்சந்திரன், வை. முருகன், ச. அந்தோனிசாமி எம். ஏ, எம். எட், கோ. இரங்கசாமி, ஐ. மாணிக்கம், அ. செங்கமலம், புலவர் க. சுப்பிரமணியன் ஆகியோரையும் இணைப்பு உறுப்பினராகத் திருவாளர்கள் முன்னாள் தலைமை ஆசிரியர் அ. சுந்தரராசன் எம்.ஏ. எம்.எட், பாக்கம்பாடி நாகராசன் குரால் இராமநாதன், சின்னசேலம் நெல் அரிசி மொத்த வணிகர் தெ. சுப்பிரமணியன் ஆகியவர்களையும் சங்க விதியின்படி தேர்வு செய்தது.

சங்கத்தில் இப்பொழுது நான்கு புரவலர்களும் இருபது வாழ்நாள் உறுப்பினர்களும் முப்பத்திரண்டு வாழ்நாள் தவணை உறுப்பினர்களும் நாற்பத்தைந்து ஆண்டு உறுப்பினர்களும் உள்ளனர்.

சங்க உறுப்பினர் கட்டணம் வருமாறு; புரவலர் ரூபாய் 600, வாழ்நாள் உறுப்பினர் ரூபாய் 200, ஆண்டு உறுப்பினர் ஆண்டுக்கு ரூபாய் 20 ஆகும்.

குகையூர்த் தமிழ்ச் சங்க வாழ்நாள் உறுப்பினரும் செயற்குழு உறுப்பினரும் பெங்களூர் தமிழ்ச் சங்க நிறுவனரும் முன்னாள் தலைவரும் ஆகிய புலவர் உயர்திரு. க. சுப்பிரமணியன் அவர்கள் முயன்று இச்சங்கத்திற்குரிய விதிமுறைகளை எல்லாம் வகுத்து அமைத்துப் பொதுக்குழுவில் வைத்து முடிவு செய்து 16—2—99 அன்று கல்லக்குறிச்சி மாவட்டச் சங்கப் பதிவு அலுவலகத்தில்

கூட்டுறவுச் சங்க விதியின்படி எஸ். எண் 35–1999 நாள் 6 – 2—99 இல் பதிவு செய்து சான்றிதழ் பெற்றுத் தந்தார்கள்.

சங்கத்தின் குறிக்கோள்

(1) தமிழ்மொழி, பண்பாடு ஆகியவற்றை வளர்ப்பதும் தமிழுக்கும் பிற மொழிகளுக்கும் இடையே சீரான உறவை வளர்ப்பதும் ஆகும்.

(2) மேற்கண்ட குறிக்கோளை நிறைவேற்றும் வகையில் எத்தகைய சாதி, நிற, மத வேறுபாடுகள் இன்றியும் எந்த அரசியல் சார்பு இன்றியும் சங்கம் தமிழ் வகுப்புக்களையும் இசை, நாட்டியம், தையல், நாடகம் சோதிடம் சித்த மருத்துவம் முதலிய நுண்கலைத் துறை வகுப்புக்களையும் பிற வகுப்பு களையும் சங்கத்தின் நோக்கங்கள் செயல் வடிவம் பெறும் வகையில் சொற்பொழிவுகளையும், சொற் போர்களையும் போட்டிகளையும் தேர்வுகளையும் இசை, நாடக நாட்டிய நிகழ்ச்சிகளையும் இன்றி அமையாத நாட்டு, வட்டார மற்றும் தமிழ்த்திருநாள்களையும் அறிஞர்களையும் கலைஞர் களையும் போற்றும் நிகழ்ச்சிகளையும் மாநாடுகளையும் சுற்றுலாக்களையும் நடத்தும்.

(3) மக்கள் நல்வாழ்வுக்குரிய சமூக நலத்தொண்டுகளையும் செய்யும்.

(4) திருக்குறள் முதலிய நீதிநூல் வகுப்பெடுத்தல்.

(5) நூலகம் படிப்பகம் அமைத்தல் அறக்கட்டளை நிறுவுதல் விளையாட்டை ஊக்குவித்தல் மரம் நடல் தமிழ்த்திருமணம் செய்தல் மாணவர் விடுதி முதியோர் இல்லம் நிறுவி நடத்துதல்.

(6) கிராமவங்கி நிறுவி மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்.

(7) மலர் வெளியிடல், நூல் வெளியிட்டு அறிவாளிகளை ஊக்குவித்தல் ஆகியவற்றை இச்சங்கம் செய்யும்.

குகையூர்த் தமிழ்ச் சங்கத்தின் மேற்கண்ட குறிக்கோளை விளக்கி ஊர்ப் பொதுமக்கள் சார்பில் 14–8–98 இல் குகையூர்த்

தமிழ்ச் சங்கக் கட்டடம் கட்ட பஞ்சாயத்து எல்லையில் இடம் ஒதுக்கித்தர வேண்டும் என்று மனு ஒன்று அளிக்கப்பெற்றது. மனுவை ஏற்ற குகையூர் ஊராட்சி மன்றத்தலைவர் உயர்திரு. எஸ். எம் பெரியசாமி அவர்கள் 16, 12, 1998 அன்று ஊராட்சி மன்ற உறுப்பினர்களைக் கூட்டிக் கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றினர்.

தீர்மானம் 41—98—99 "கூகையூர் ஊராட்சி கூகையூர் கிராமத்தில் கிராமநத்தம் சர்வே எண் 539/36இல் 00.5 சென்ட் காலியிடம் கூகையூர் அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் குகையூர்த் தமிழ்ச் சங்கத்திற்குத் தானமாக வழங்க ஏகமனதாகத் தீர்மானிக்கப் பட்டது."

(ஒப்பம்) திரு. எஸ். எம். பெரியசாமி பி.ஏ. அவர்கள்
தலைவர், கூகையூர் ஊராட்சி

இதன் உண்மை நகல் 19–12–98இல் குகையூர்த் தமிழ்ச் சங்கத்திற்குக் குகையூர் ஊராட்சி அலுவலகத்தில் இருந்து மேற்கண்ட தீர்மானம் வழங்கப் பெற்றது.

ஊராட்சி மன்றம் வழங்கிய அந்நிலத்தில் இனி கட்டடம் நல்ல முறையில் ஒன்று கட்டவேண்டும். சங்கத்தின் மனையின் நாற்புறமும் தெருக்கள் உள்ளன. சாலையின் முன் திருக்கோவில், பள்ளி, மருத்துவ மனைப் பக்கத்தில் சங்கமனை அமைந்துள்ளது.

ஊராட்சி மன்றம் வழங்கிய அந்நிலத்தில் கலை அரங்கம் அலுவலகம் வகுப்பறைகள், ஏழை மாணவர் தங்கிப் படிக்க கூடம். ஆகியவை கொண்ட ஈரடுக்கு மாடிக்கட்டிடம் கட்டத் திட்டம் வகுக்கப் பெற்றுள்ளது. இத்திட்டத்திற்கு ரூபாய் 10,00000 (பத்துஇலட்சம்) முதற்கட்டமாகத் தேவைப்படும்.

தமிழ்ச் சங்கக் கட்டிடத்தைக்கட்ட பொருள் வேண்டும். இப்பொருளைத் திரட்ட என்ன செய்யலாம்? என்று கருதிய பொழுது மயிலம் சிவஞான பாலயசுவாமிகள் தமிழ்க்கல்லூரி, கரந்தைப் புலவர் கல்லூரி, சென்னைப் பல்கலைக்கழகம், தஞ்சைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ்ப் பேராசிரியராக விளங்கியவரும் 90 அகவை நிரம்பிய முதுபெரும் புலவரும்

குகையூர்த் தமிழ்ச் சங்கத் தலைவரும் ஆகிய திரு. அடிகளாசிரியர் அவர்கள் ஒரு கருத்தை வழங்கினார்கள் ''ஊர் தோறும் தமிழ்ச் சங்கங்கள் தோன்ற வேண்டும். ஊர் மக்களிடையே நன்னெறி பரவவேண்டும் 50 ஆண்டுகளுக்கு முன் பள்ளி மாணவர்க்கு அறநூல்களைத் தொடக்க காலத்தில் இருந்தே கற்றுத் தந்தனர். அதனால் மாணவரும் குடிமக்களும் பண்பட்டவர்களாக விளங்கினார்கள். இப்போது அந்நிலை இல்லை. நமது தமிழ்ப்பாட்டி ஆகிய ஔவையார் எழுதிய 'நல்வழி' என்னும் நல்ல நூலுக்கு உரை ஒன்று எழுதி அதைப் பதிப்பித்து அதைத் தமிழ் மக்களிடம் எடுத்துச் சென்று கொடுத்து அதன் வழியாகப் பொருளீட்டலாம் என்ற கருத்தை வைத்தார்கள்.''

பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக யான் இருந்த பொழுது தமிழ் இலக்கிய விழா பத்துநாட்கள் கொண்டாடப் பெற்றது. தவப்பெருந்திரு குன்றக்குடி அடிகளாரிடம் கலந்து பேசி சங்க இலக்கியவிழா, இலக்கணவிழா, காப்பிய விழா. சமய இலக்கிய விழா. சிற்றிலக்கிய விழா எனப் பல்வேறு விழாக்களுக்குச் சிறந்த அறிஞர்களை அழைப்பதென முடிவு செய்தோம். அடிகளாரிடம் 'தொல்காப்பியம்' குறித்துப் பேச யாரை அழைக்கலாம் எனக் கேட்டேன் உடனே அடிகளார் இன்று தொல்காப்பியம் குறித்துப் பேச விரல்விட்டு எண்ணத் தக்கவர்களில் பேராசிரியர் திரு அடிகளாசிரியர் தலைசிறந்தவர் அவரை அழைக்கலாம் என்றார்கள், அவர்கூறியதைக் கேட்ட யான் உணர்ச்சி வசப்பட்டேன். அப்போது அடிகளாரிடம் பேராசிரியர் எனது ஆசிரியர் மேலும் உறவு முறையில் அண்ணார் – என்னை இவ்வூருக்கு (பெங்களூருக்கு) ஆற்றுப் படுத்தியவர்களும் அவர்களே'' என்றேன், அடிகளார் பெரிதும் மகிழ்ந்தார்கள்,

பேராசிரியர் ஆறு உரை நூல்களும் பத்து உரை வரைவு நூல்களும் ஓலைச் சுவடியிலிருந்து ஆறு பதிப்பு நூல்களும் ஆறு அரிய ஆராய்ச்சி நூல்களும் பதினான்கு செய்யுள்வடிவம் தாங்கிய படைப்பிலக்கிய நூல்களும் நான்கு உரைநடை நூல் களும் கல்வெட்டு நூலும் படைத்துள்ளார்கள். மேலும் பத்து அச்சு ஏறாத அரிய நூல்களும் உள்ளன.

பல்துறைப் பேரறிஞராகிய திரு அடிகளாசிரியர் அவர்கள் பதிப்புத்துறையில் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரைப் போன்றவர்கள். பல நூல்களையும் சுவடிகளையும் ஆய்ந்து பார்த்துப் படி எடுத்து அச்சிடும் பழக்கம் இளம்வயது முதலே அவர்களிடம் இருந்து வந்தது. பல்துறை வல்லுநராகிய பேராசிரியர் திரு அடிகளாசிரியர் அவர்கள் மிகமிக முயன்று 'நல்வழிக்கு' நல்ல பாட பேதங்களுடன் கூடிய உரையை முடித்துத் தந்துள்ளார்கள். அதனைக் குகையூர்த் தமிழ்ச் சங்கத்தின் முதல் வெளியீடாக அச்சிட்டுள்ளோம்.

பேராசிரியர் நுண்மாண் நுழைபுலங்கொண்டு துருவித்துருவி ஆய்ந்து பல பாடல்களுக்குச் சிறந்த பாட பேதங்களை எடுத்துக்காட்டித் திருமூலர் கருத்துக்கள் நல்வழியில் பளிச்சிடுவதைத் தமிழ் கூறும் நல்லுலகுக்கு வழங்கியுள்ளார்கள். இது ஒரு நல் வழிகாட்டும் ஒப்பற்ற ஔவைப் பிராட்டியாரின் நல்வழி நூல். இந்நூலுக்கு உரை வழங்கிய ஆசிரியர்க்கு என் வணக்கத்தைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். கட்டடம் கட்ட மனை வழங்கிய ஊராட்சி மன்ற உறுப்பினர்க்குச் சங்கம் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உறங்காப் போதெல்லாம் தமிழ்பற்றியும் தமிழ் இலக்கியம் பற்றியும் பேசிக்கொண்டே இருக்கும் பேராசிரியர் அவர்கள் குகையூர் தமிழ்ச் சங்கத்திற்குச் சிறந்த கொடையை நூலாக வழங்கியுள்ளார்கள். தமிழ் பயிலும் ஒவ்வொருமாணவர்கையிலும் தமிழர் கையிலும் இந்நூல் தவழ்ந்து நல்வழி காட்டவேண்டும். இந்நூலைக் கண்ணுறும் தமிழ்நாட்டுச் சான்றோர்கள் எல்லாரும் தாங்கள் ஒவ்வொரு நூலை விலைக்கு வாங்கிக் கொள்வதோடு மட்டுமின்றிக் கட்டடம் கட்டவும் நன்கொடை வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றோம்.

மைய அரசும், தமிழக அரசும், வள்ளல்களும் இக்கிராமச் சங்கத்துக்கு நிதி உதவி அளித்து வளர்க்க வேண்டும் என்று பணிவோடு வேண்டுகிறோம். நற்பணிக்குச் செய்யும் உதவியை நன்றியுடன் போற்றி மகிழ்வோம்.

இங்ஙனம்

குகையூர்
12—10—99

க. சுப்பிரமணியன்
ஆசிரியரின் மாணவன்

உரையாசியரின் உரை

(திரு. அடிகளாசிரியர்)

மக்கள் இருவகையினராவர். ஒருவர் தன்னலமே கருதுபவர். மற்றொருவர் தானும் பிறருமாகிய எல்லோரும் வாழ வேண்டுமென்று கருதுபவர். தன்னலம் கருதுபவர் பிறர்க்கு இரக்கம் காட்டுவதில்லை; எவர்க்கும் எந்த உதவியும் செய்வதில்லை; தான் வாழ்ந்தால் போதும் என்றே கருதுபவர்; இவரிடம் அன்பு முதலான நற்பண்புகளும் அறம் முதலான நற் செயல்களும் சிறிதும் விளங்கா. மாறாகப் பொருள் ஒன்றையே விரும்பி அதைத் தேடுவதற்காகப் பிறரை ஏமாற்றும் வஞ்சகச் செயல் ஒன்றையே கொண்டு அதனைத் தேடுவர். இவருடைய உள்ளம் பாவம்இது புண்ணியம்இது என்று அறியும் அறிவைப் பெறாத இருண்ட உள்ளமாய் இருக்கும்.

பொதுநலம் கருதுபவர் தாமும் வாழ்ந்து உலகமும் வாழ வேண்டுமென்ற எண்ணத்தை உடையவர். நாடெங்கும் வாழ கேடொன்றும் இல்லை என்ற கொள்கையைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்பவராய் இருப்பர். இவருடைய உள்ளத்தில் அன்பு, ஆர்வம், அருள், அறம், மெய்ம்மை முதலான நற்பண்புகளெல்லாம் இடம் பெற்றிருக்கும். இவருடைய உள்ளம் பாவம் இது, புண்ணியம் இது என்பவற்றைப் பகுத்தறியும் அறிவுடன் கூடிய ஒளிபடைத்ததாய் இருக்கும். சுருங்கக் கூறின் இவர்களுடைய உள்ளம் ஒளிபடைத்த பரந்த உள்ளமாகும் பாரதியார் ''ஒளிபடைத்த நெஞ்சினாய்வா'' என்று கூறியதையும் இங்கு நோக்குக.

உலக மக்களே! நீங்களெல்லாம் தன்னலக்காரர்கள் போன்ற இருண்ட நெஞ்சத்தைப் பெறாதீர்கள். பொதுநலம் கருதும் பெருந்தகையாளருடைய ஒளிபடைத்த நெஞ்சத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

நாம் வாழும் நாடும் நாம் பேசும் மொழியும் நன்றாக இருக்க வேண்டும், வளர வேண்டும். இந்த எண்ணத்தை

உடையவரே உயர்ந்த மக்களாவர். அந்த எண்ணம் இல்லாதவ ரெல்லாம் ஓடி ஆடித் திரியும் குருவிக் கூட்டத்தின் வாழ்க்கையைப் பெற்றவராவர். இதனை உணர்த்தும் எனது பாடல் வருமாறு:

நாடு வாழ மொழிவாழ
நல்ல இலக்கே இல்லாதார்
கூடு கட்டிக் குடியிருக்கும்
குருவிக் கூட்டம் போல்வாரே
தேடி இரையைத் தின்பதுவும்
திளைத்துக் குஞ்சை ஈனுவதும்
ஓடி முழங்கி உலாவுவதும்
உற்ற இலக்காம்.

(தமிழ் மாண்பும் தமிழ்த் தொண்டும்)

மொழிவாழுந் தொண்டு

எங்கள் ஊராகிய குகையூரிலே தமிழ்மொழி வளர்ச்சி கருதி குகையூர்த் தமிழ்ச் சங்கம் என்ற தொண்டு நிறுவனத்தை உண்டாக்கி உள்ளோம், அத்தொண்டு நிறுவனத்திற்கு, வயது முதிர்ந்த செயல் இழந்த நிலையில் இருக்கும் திரு. அடிகளாசிரி யனாகிய என்னைத் தலைவராக்கியுள்ளனர். இத்தமிழ்ச் சங்கம் தனக்குள்ள சட்டதிட்டங்களையெல்லாம் வகுக்கப்பெற்று 16—2—1999 ஆம் நாளன்று கல்லக்குறிக்கி மாவட்டச் சங்கப் பதிவு அலுவலகத்தில் கூட்டுறவுச் சங்க விதியின்படி பதிவு பெற்றுள்ளது.

குகையூர் ஊராட்சி மன்றத்தார் ஐந்து சென்ட் நிலத்தை குகையூர் தமிழ்ச் சங்கக் கட்டிடத்திற்கு நன்கொடையாக வழங்க ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். மேற்கண்ட இடத்தில் தமிழ்ச் சங்கத்திற்கு நல்ல கட்டடம் கட்டவேண்டும். அதற்குப் பொருள் வேண்டும். சங்கத் தலைவனாகிய நான் அப்பொருளுக்கு என்ன செய்யலாம் என்று கருதினேன். நல்ல தமிழ் நூல் ஒன்றிற்கு உரையெழுதி அச்சிட்டு அதை எடுத்துக்கொண்டு மக்களிடம் சென்று பொருள் கேட்கலாம் என்று கருதினேன். முதலில் எந்த இலக்கியத்தை அச்சிடலாம் எனக் கருதிப் பார்த்தேன். தவத்திரு ஔவையார் அருளிய 'நல்வழி' என் நினைவிற்கு வந்தது, இந்நாள்வரை

வந்த நல்வழிப் பதிப்புக்களில் பிழையான பாடங்களும் பொருந்தாத உரைகளும் இருந்தன. அவற்றை யெல்லாம் திருத்த வேண்டும் என்று கருதியிருந்தேன். அக்கருத்தின்படி நல்வழி நூலிற்கு 26—6—1999ஆம் நாள் முதல் உரையெழுதத் தொடங்கினேன். எனக்கு ஏற்பட்டுள்ள நரம்பு நோயால் என்னால் எழுத முடிவதில்லை. ஆதலால் யான் சொல்லச் சொல்ல எழுதும் பணியை எனது மூன்றாவது மகனாகிய அ. இளங்கோவன் அவர்கள் முதலில் தொடங்கி வைத்து உதவினார். சின்னசேலம் சிவன்கோவில் தெருவில் உள்ள மேலமடம் என்னும் சிவநேசர் மடத்தைச் சேர்ந்த திரு. கு. மோகனசுந்தரம் அவர்கள் துணைபுரிய உரை எழுதி முடித்தேன்.

அச்சகப்பணி!

வழக்கம் போல் என்னுடைய நூல்களைப் பதிப்பாசிரியராக அமர்ந்து பதிப்பித்து வரும் எனது இளையமகன் அ. சிவபெருமானை அழைத்துக் கையெழுத்துப் பிரதியை வழங்கி நல்ல முறையில் அச்சிட்டு தமிழுலகத்திற்கு வழங்குமாறு ஒப்புவித்தேன். அவரும் அப்பிரதிகளை ஆர்வமுடன் பெற்று நல்ல முறையில் திருத்தமான அச்சுக்காப்பியைத்தயார் செய்து அதை என்னிடம் படித்துக் காட்டி அச்சேற்றினார். மேலும், அச்சகம் சென்று மெய்ப்பு, அட்டை முதலானவற்றை ஒழுங்கு செய்து தம் கடின உழைப்பால் பதிப்பித்து வழங்கியுள்ளார்.

மாரியப்பா நகர் புலவர் இரா. கணபதி அவர்கள் என்பால் பற்றுக்கொண்டு உடனுக்குடன் மெய்ப்புக்களைத் திருத்தி உதவினார். மேலும், இந்நூலை மிக ஆர்வமுடன் அச்சிட்டு வழங்கியவர்கள் சுபம் அச்சக உரிமையாளர்களாகிய திரு. தட்சிணாமூர்த்தியும் திரு. குருசாமியும் ஆவர். இவ்வாறு நூலாக்கத்திற்கு உதவிய மேற்கூறிய அனைவரையும் நன்றாக வாழ்த்தி எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்ஙன்

10—12—99 **அடிகளாசிரியன்**

குகையூர்த் தமிழ்ச்சங்கக் கட்டட நிதிக்கான இலக்கிய வெளியீட்டிற்குப் பொருள் வழங்கிய கொடையாளர்

குகையூர் ஐந்து சிவன் கோயில்களை உடைய மிகச் சிறந்த சிவத்தலமாகும். இவ்வூரின் தல விருட்சம் நெல்லிமரமாகும். அக்காரணத்தால் இவ்வூருக்கு நெல்லிவனம் என்ற பெயரையும். இவ்வூர் சிவபெருமானுக்கு நெல்லியப்பர் என்ற பெயரையும் அறிஞர் வழங்கி வருகின்றனர்.

இவ்வூரில் திருமூலசித்தநாதரின் குடும்பங்கள் பல இருந்துள்ளன. அவற்றில் சில குடும்பத்தினர் வெளியூரில் தங்கி வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் ஒரு குடும்பம் நெல்லியப்ப ஐயர் குடும்பமாகும். இந்நெல்லியப்ப ஐயர் அருகிலுள்ள வீரகனூர் சென்று அங்கு நல்லமுறையில் வாழ்ந்து வந்தனர். இவருடைய பரம்பரையைச் சார்ந்த சுப்பிரமணிய ஐயர் என்பவர் நல்ல தமிழ்ப் புலமை வாய்ந்த ஆசிரியராக விளங்கினார். இவர், மீண்டும் தம் முன்னோர்கள் வாழ்ந்த குகையூருக்கே வந்து கிராமப்பள்ளி ஒன்றை வைத்து நடத்தினார்.

மேற்குறிப்பிட்ட சுப்பிரமணிய ஐயரின் ஒரே மகன் சின்னசாமி ஐயராவார். இவர் தந்தையைவிட மிகவும் கல்வியறிவு உடையவராக விளங்கினார். மேலும், வீரசைவ சித்தாந்த நூல்கள், வேதாந்த நூல்கள் மற்றும் தமிழிலக்கியங்கள் முதலான வற்றில் வல்லவராயும் இருந்தார். இவருடைய மகன்களுள் ஒருவராகிய பொன்னுசாமி ஐயர் குகையூருக்கு அருகிலுள்ள காரியானூரில் நல்ல ஆசிரியராக விளங்கினார். மற்றொரு மகனாகிய தெய்வநாயக ஐயர் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்று, சின்னசேலம் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராக விளங்கினார். மேலும், அவ்வூரிலேயே தங்கி அப்பள்ளி வளர்ச்சிக்காக மிகவும் உழைத்தார். இவர்,

நல்லாசிரியர் விருது பெற்றவர்; சிறந்த சொற்பொழிவாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட தெய்வநாயக ஐயரின் மகனாகிய உயர்திரு தெ. சுப்பிரமணியம் என்ற பெயரைத் தாங்கிய மணி என்பவர், சின்னசேலத்தில் தங்கி, நெல் மற்றும் அரிசி வணிகராக விளங்கி வருகின்றார். இவர் யாருக்கும் இனியர் நல்ல பண்பாளர் மேலும் தங்கள் முன்னோர்கள் கோயிலான குகையூர் சித்தநாதர் திருக்கோயிலுக்கும், திருப்பணிக்கும் மிகுந்த பொருளைக் கொடுத்து உதவுகின்ற திருப்பணிச் செல்வர். இவரும், இவரது இல்லக்கிழத்தி மணிமொழி என்போரும் குகையூர்த்தமிழ்ச் சங்கத்திற்கு வாழ்நாள் உறுப்பினராக உள்ளனர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த மணி (எ) சுப்பிரமணியம் குகையூர்த் தமிழ்ச் சங்கக் கட்டட நிதியைக் கருதி, யான் வெளியிட்டுள்ள இந்நல்வழி நூலின் அச்சகச் செலவு முழுமையும் விரும்பி ஏற்றுக் கொண்டார். இவரின் இச் செயலைத் தமிழுலகத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்து இவரையும் இவர் குடும்பத்தினரையும் வாழத்தி மகிழ்கின்றேன்

குகையூர்
10—12—99

இங்ஙன்
திரு. அடிகளாசிரியன்

உ

இறைவன் துணை

தவத்திரு திருமூல ஔவையார்

திருவாய் மலர்ந்தருளிய நல்வழிப்

பாடல்களும் அவற்றிற்குக் குகையூர்த்

தமிழ்ச் சங்கத் தலைவர்

திரு. அடிகளாசிரியர் அருளிய

விளக்க உரையும்

காப்பு

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந் தா.

திணை:- பாடாண் திணை துறை:- கடவுள் வாழ்த்து

சொற்பொருள் உரை:-

கோலம் செய் துங்கம் கரிமுகத்துத் தூமணியே:-

அழகினைச் செய்கின்ற தூய யானை முகத்தை யுடைய நல்ல மாணிக்கம் போன்ற கணபதியே!

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன்:-

பசுவின் பாலும், தெளிந்த தேனும், வெல்லப் பாகும், பருப்பு வகைகளும், ஆகிய இவை நாலையும்

ஒன்றாகக் கலந்து உனக்கு உண்ணும் பொருளாக நான் கொடுப்பேன்.

நீ யெனக்குச் சங்கத் தமிழ் முன்றும் தா:-

கடவுளாகிய நீ அடியேனாகிய எனக்குச் சங்கத் தமிழ் மூன்றையும் தருவாயாக.

விளக்கவுரை

கோலம் செய் துங்கக் கரிமுகம் என்றது, அன்பர்கள் 'ஓம் சுமுகாய நம': என்று கணபதியை முதலில் வழிபடத் தொடங்குவர் ஆதலின் இவரும் அம்முகத்தைக் கருதித் துங்கக் கரிமுகத்துத் தூமணியே என்று கூறினார்.

'சங்கத் தமிழ் மூன்றும் தா' என்பதற்கு இது வரை அறிஞர்கள் எல்லோரும் இயல், இசை, நாடகம் என்னும் சங்கத் தமிழ் மூன்றையும் எனக்குக் கொடுப் பாயாக என்று உரை எழுதியுள்ளனர். ஆனால், நான் அவ்வடிக்கு வேறு உரை கூறுகின்றேன். அவ்வுரை யாவையெனின்,

'அந்நிலை மருங்கின் அறம்முதல் ஆகிய
மும்முதல் பொருட்கும் உரிய' என்ப.

(தொல்காப்பியம் செய்யுளியல்–102)

என்னும் நூற்பாவின்படி தமிழ்ச் செய்யுள்களெல்லாம் அறம் பற்றியும், பொருள் பற்றியும், இன்பம் பற்றியும், வரும் ஆதலின் அந்நூற்பாவின் கருத்தின் படி எனக்கு அறத் தமிழையும், பொருட் தமிழையும், இன்பத் தமிழையும் கொடுப்பாயாக என்றும் உரை

கூறலாம். ஆனால் ஔவையார் நல்வழி நாற்பதாம் பாட்டில் 'திருமுலர் சொல்லும் ஒருவாசக மென்றுணர்' என்று திருமந்திரத்தைச் சிறப்பித்துக் கூறுதலின் அத்திருமந்திரம் கூறுகின்ற 'சதாசிவ தத்துவம் முத்தமிழ் வேதம்' என்று கூறுவதைக் கருதினால் திருமூலர் சொல்லுகின்ற முத்தமிழைத் தா என்றும் கூறலாம்.

அம்முத்தமிழ் எவையெனில் சீவதுரியத்தைக் கூறுகின்ற தமிழும், பரதுரியத்தைக் கூறுகின்ற தமிழும், சிவதுரியத்தைக் கூறுகின்ற தமிழும் ஆகிய முத்தமிழையும் எனக்குத் திருமந்திரத்திலிருந்து கொடு என்று உரை கொள்வதே பொருந்தும். இத் தமிழைக் குதம்பைச்சித்தர் 'முத்தமிழ்' என்றே கூறுகின்றார். அவர் கூறும் பாடல் வருமாறு.

முத்தமிழ் கற்று முயங்குமெய்ஞ் ஞானிக்குச்
சத்தங்கள் ஏதுக்கடி - குதம்பாய்
சத்தங்கள் ஏதுக்கடி

(குதம்பைச் சித்தர் பாடல் – 10)

என்பது அப்பாடல்.

ஔவையார் 'துங்கக் கரிமுகத்துத் தூமணியை நோக்கி, நான் உனக்கு நாப்புலன் நுகர்வதற்குரிய பால் முதலானவற்றைப் படைப்பேன். நீ அப் படைப்பை ஏற்றுக் கொண்டு, என் உள் உணர்வினால் உணரத்தக்க சங்கத் தமிழ் மூன்றையும் தருக என்று வேண்டுகின்றார்.

ஔவையாரின் வேண்டுதலின் பொருள் சங்கத் தமிழ் மூன்றாகும்.

குறிப்பு

சங்கத்தமிழ் என்பதற்குச் சேர்ந்த முத்தமிழ் என்று பொருள் கொள்க.

சங்கம் - சேர்தல்

சீவதுரியமாகிய இயற்றமிழும், பரதுரியமாகிய இசைத் தமிழும், சிவதுரியமாகிய நாடகத் தமிழும் ஒன்று சேர இருத்தலின் சங்கத் தமிழ் என்றார்.

எல்லாச் சமயவாதிகளும் ஒருமுகமாகக் கூறும் அறச்செயல்

1. புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவவை மண்ணில் பிறந்தார்க்கு வைத்தபொருள் - எண்ணுங்கால் ஈதொழிய வேறில்லை எச்சமயத் தோர்சொல்லும் தீதொழிய நன்மை செயல்.

சொற் பொருளுரை

புண்ணியம் ஆம்:-

புண்ணியம் என்பது ஆம் என்று கூறப்படும் ஆகூழ் ஆகிய நல்வினையாகும்.

பாவம் போம்:-

பாவம் என்பது போம் என்று கூறப்படும் போகூழ் ஆகிய தீவினையாகும்.

போனநாள் செய்த அவை:-

நல்வினை, தீவினை என்கிற அவ்விரண்டும் சென்ற பிறவிகளில் செய்தவையாகும்.

எண்ணுங்கால்:-

அவற்றின் இயல்பை ஆராயுமிடத்து

மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள் ஈதொழிய வேறில்லை:-

நிலவுலகத்தில் பிறந்த மக்களுக்கு வைப்பாக வைத்த பொருள் இப்புண்ணிய பாவமாகிய இவற்றைத் தவிர வேறு ஒன்றும் இல்லையாகும்.

எச்சமயத்தோர் சொல்லும் தீதொழிய நன்மை செயல்:-

எல்லாச் சமயவாதிகளும் சொல்லுகின்ற உறுதிச் சொல்லானது, தீவினை செய்யாது ஒழிக, நல்வினை செய்க, என்பதாம்.

விளக்கவுரை

புண்ணியத்தைத் திருவள்ளுவர் 'ஆகூழ்' என்பர். அதனை இவர் 'ஆம்' என்றார். பாவத்தைப் போகூழ் என்பர். அதனை இவர் 'போம்' என்றார். வைத்த பொருள் என்றால் நமக்குப் பயன்படும்படி தேடி வைத்துக் கொள்ளும் வைப்பு நிதியாகிய பொருள். எல்லாச் சமயத்தார்களும் மாறுபடாமல் கூறுகின்ற உறுதிப்பொருள் நல்வினை, என்கின்ற புண்ணியம் ஒன்றேயாகும். அதுவே ஒவ்வொருவருக்கும் வைப்புநிதி என்க.

இப்பாட்டு மூன்று உறுதிப் பொருள்களில் சிறந்த அறத்தை வலியுறுத்திக் கூறுகின்றது.

''புண்ணிய பாவம் இரண்டுள பூமியில்
நண்ணும் பொழுது அறிவார் சிவஞானிகள்''

(1674–திருமந்தி)

என்னும் திருமந்திரப்பாடலை அடியொற்றி, நல்வழி ''புண்ணியமாம் பாவம் போம், போன நாட் செய்தவவை, மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள்'' (நல்வழி-1) என்று கூறும்.

பட்டாங்கில் உள்ள இருவகைச் சாதி

2. சாதி இரண்டொழிய வேறுஇல்லை; சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
இட்டார் பெரியோர்; இடாதோர் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி.

மேதினியில் நீதிவழுவா நெறிமுறையின் சாற்றுங்கால்:

இந்த நிலஉலகத்தில், உலகியல் நடைமுறை யாகிய நீதி தவறாத வழிமுறையினாலே, சாதியாகிய குலத்தியல்பைச் சொல்லுமிடத்து.

சாதி இரண்டொழிய வேறு இல்லை:-

அச்சாதி பலர் பலவிதமாகக் கூறும் முறைகளை நீக்கிவிட்டுக் கருதின் இரண்டு ஆகுமே ஒழிய வேறு இல்லையாகும்.

இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்:-

அவ்விரண்டாவன, 'கொடுக்கும் பண்பை உடையவர் எல்லாம் பெரியகுலத்தினர் ஆவர்.

அவ்வாறின்றிப் பிறர்க்குக் கொடுக்கமுடியாத பண்பை உடையவர் எல்லாம் தாழ்ந்த குலத்தினர் ஆவர்.

பட்டாங்கில்உள்ளபடி:-

இது உண்மையாகிய நல்வழியில் கண்டவித மாகும்.

விளக்க உரை

சாதியைப் பற்றிப் பலர்கூறும் நெறி:-

கீதையில் கண்ணன் சாதியை வர்ணம் என்று கூறி, அவ்வர்ணங்கள் பிராமணன், அரசன், வைசியன், வேளாளன் என நான்காகும் என்றும், அவை குணம் காரணமாகவும், தொழில் காரணமாகவும் பிரிக்கப் பட்டன என்றும், அவற்றை நானே பிரித்தேன் என்றும் கூறியுள்ளார்.

மனு முதலான மிருதிகள், அந்நான்கு வர்ணத் துடன் அனுலோமன், பிரிதிலோமன், அந்தராலன், சண்டாளன் என்று இவைகளை எல்லாம் சாதிப் பிரிவுகளாகக் கூறும். ஆனால் ஔவையார் தாம் கூறிய நல்வழியுள் அவற்றை எல்லாம் நீக்கிவிட்டு, கொடுப்பவன் உயர்சாதி, கொடுக்காதவன் இழிந்த சாதி என்று கூறியுள்ளார்.

பட்டாங்கு:-

திருமூலர் சத்மார்க்கமாகிய சன்மார்க்கத்தைத் திருமந்திரத்தில் கூறுகின்றார். அந்த சன்மார்க்கம் என்ற சொல்லை ஔவையார் இங்கே நல்வழி என்று

மொழி பெயர்த்துக் கூறுகின்றார். எனவே சன்மார்க்கமும், நல்வழியும் ஆகிய இவற்றையே இப்பாட்டு பட்டாங்கு என்று குறிப்பிடுகின்றது.

சத்து என்ற வடசொல்லுக்குக் கருதப்படும் நனவு, கனவு, சுழுத்தி முதலான அவத்தைகளில் எல்லாம் மாறுபடாமல் என்றும் ஒரே நிலையில் உள்ளது என்று பொருள் கூறுவர். இப்பட்டாங்கில் கூறப்படும் செய்தி எல்லாம் என்றும் உண்மையாகவே இருக்கும் என்க.

சன்மார்க்கம், பட்டாங்கு, நல்வழி என்பன ஒருபொருட் சொற்களாம்.

குறிப்பு

ஜாதி என்ற வடசொல் சாதி எனத்திரிந்தது. இதற்குப் பிறப்பு என்பது பொருளாகும்.

உடம்பின் இழிவும் அதன்மேல் பற்றற்று வீடுபெறுதலும்

3. இடும்பைக்கு இடும்பை இயல்உடம்பு இதன்றே
[1]இடும்பொய்யை மெய்என்று இராதே - [2]விடும்கடுகை
உண்டாயின் உண்டாகும் ஊழில் பெருவலிநோய்
விண்டாரைக் கொண்டாடும் வீடு.

பாட பேதம்:-

1. இடும்பையை
2. இடும் கடுக

இயல் உடம்பு இடும்பைக்கு இடும்பை இதுஅன்றே:-

நமக்குப் பொருந்தி வரும் உடம்பு இடும்பை யாகிய துன்பங்களுக்கு இட்டு வைக்கும் பையாகும் இது அல்லவா?

இடும்பொய்யை மெய் என்று இராதே:-

இறந்தால் இடுகாட்டில் இடுவதற்கு உரியதாகிய பொய்யாகிய உடம்பை மெய்ப்பொருள் என்று கருதி யிராதே.

கடுக விடும்:-

விரைந்து உடம்பின்மேல் உண்டாகும் பற்றினை விட்டு விடுவீராக.

உண்டாயின் வீடு உண்டாகும்:-

உடம்பின் மேல் பற்றுவிடுதல் ஒருவர்க்கு உண்டாயின் முத்தி என்கின்ற வீடுபேறு உண்டாகும் என்க. அவ்வீடுபேறு எத்தகையது எனின்;

ஊழில் பெருவலி நோய் வீண்டாரைக் கொண்டாடும் வீடு:-

நல்வினை, தீவினை என்னும் ஊழ்வினையால் உண்டாகின்ற பெரிய வலிமை தங்கிய பிறப்பு, இறப்பு என்னும் நோயை நீக்கியவர்களை விரும்பி ஏற்றுக்கொள்ளும் வீடு என்க.

விளக்கம்

''பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்''

ஆதலால் உடம்பின் பற்றைக் கடுகவிடும் என்று கூறினார்.

''பொய் - மெய் என்றது முரண் தொடை.

'பிறப்பறுக்கல் உற்றார்க்கு உடம்பும் மிகை'

(திருக்குறள்–345)

ஆதலின் உடம்பின் மேல் உண்டாகும் பற்றினைக் கடுக விடும் என்றார்.

இதைக் கருதின் 'இடும் கடுக' என்ற பாடம் சிறப்பன்று 'விடும் கடுக' என்பதே சிறந்த பாடம்.

'இடும் கடுக' என்ற பாடத்தின்படி விரைந்து பிறர்க்குப் பொருள் கொடுத்து அறம் தேட வேண்டும். அறத்தால் சுவர்க்கம் உண்டாகுமே ஒழிய வீடுபேறு உண்டாகாது.

இப்பாட்டில் 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்னும் முதுமொழியை நோக்கி 'உண்டாயின் உண்டாகும் வீடு' என்று கூறியுள்ளார்.

குறிப்பு

நல்வினையைப் பொன் விலங்கென்றும், தீவினையை இரும்பு விலங்கென்றும் அறிஞர் கூறுவர். தளைத்தலில் இரண்டும் ஒன்றேயாகும். ஆதலால் இரண்டும் நீங்கியவர்களுக்கே வீடுபேறு உண்டாகுமென்க.

எவ்வளவு சிறந்தவர்க்கும் ஆம்காலத் தன்றிச் செயல் முடியாது

4. எண்ணி ஒருகருமம் யார்க்கும்செய் யொண்ணாது
புண்ணியம் வந்தெய்தும் போதல்லால்-கண்இல்லான்
மாங்காய் விழுவெறிந்த மாத்திரைக் கோல் ஒக்குமே
ஆம்காலம் ஆகும் அவர்க்கு.

யார்க்கும்:-

மிகச் சிறந்த எவர்க்கும்

புண்ணியம் வந்து எய்தும் போதல்லால்:-

ஆகூழாகிய நல்வினை வந்து எய்தும் பொழு
தன்றி (தீவினை நிகழும் காலத்தில்)

எண்ணி யொரு கருமம் செய்ய ஒண்ணாது:-

நன்கு எண்ணினாலும், ஒரு செயலையும் செய்ய
இயலாது.

ஆம் காலம் ஆகும் அவர்க்கு:-

ஆகூழின் காலமாகிய நல்வினைப் பயன் நிகழும்
காலத்து, எவ்வளவு சிறந்தவராகயிருந்தாலும்.

*கண்ணிலான் மாங்காய் விழவெறிந்த மாத்திரைக்
கோல் ஒக்கும்:-*

குருடன் ஒருவன் மரத்திலுள்ள மாங்காய்
விழுமாறு குறுந்தடியை வீசி மாங்காயை விழச்
செய்தாற்போலப் பயன்தரும் என்க.

விளக்கவுரை

'யார்க்கும்' என்பதில் உள்ள உம்மை உயர்வுச் சிறப்பும்மை.

செயலைச் செய்பவர் எவ்வளவு பெரியவரா னாலும் 'ஆகூழாகிய நல்வினை இல்லையாயின் எவ்வளவு எண்ணி முயன்றாலும் அச்செயல் முடியாது என்க.

ஆகூழாகிய ஆம்காலம் எய்திய ஒருவன் எவ்வளவு சிறியவனானாலும், கண்ணில்லான் மாங்காய் விழ எறிந்த மாத்திரைக் கோலைப் போலப் பயனடை வான் என்க.

முடிவு

யார்க்கும் புண்ணியம் வந்து எய்தும்போது அல்லாத தீக்காலமாயின் எண்ணி ஒரு கருமம் செய்ய ஒண்ணாது.

ஆனால் ஆம்காலம் எய்திய போது கண்ணில்லான் மாங்காய் விழ எறிந்த மாத்திரைக் கோல் போலப் பயன் பெறுவன்.

வாராத நல்லவைகளையும் வந்த தீயவைகளையும் எண்ணிவருந்தி இறப்பதே மக்கள் தொழில்

5. வருந்தி அழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமின் என்றால் போகா-இருந்தேங்கி
நெஞ்சம்புண் ணாக [1]நெடுங்காலம் தான்நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்

பாடபேதம்:-

1 நெடுந்தூரம் தாம் நினைந்து

வாராத:-

நல்வினை இல்லாமையால் வாராதவையாகிய நல்லவைகளை.

வருந்தி அழைத்தாலும் வாரா:-

மிக முயன்று வம்மின்கள் என்று அழைத்தாலும் அந்நல்லவை வராவாம்.

பொருந்துவன:-

தீவினையால் நமக்குப் பொருந்தி வரக்கூடிய தீயவைகளை.

போமின் என்றால் போகா:-

மிக வெறுத்துப் போமின் என்று கூறி விலக்கினாலும் அத்தீயவைகள் போகாவாம்.

இருந்து ஏங்கி

நல்லவைகள் வாராமையாலும், தீயவைகள் போகாமையாலும் கவலையுடன் இருந்து ஏக்கமடைந்து.

நெஞ்சம் புண்ணாக நெடுங்காலம் தான் நினைந்து:-

மனம் புண்படுமாறு நெடுங்கால அளவும் வராத நல்லவைகளையும் வந்த தீயவைகளையும் எண்ணி.

துஞ்சுவதே மாந்தர் தொழில்:-

இறப்பதே உலக மக்களின் தொழிலாக அமையும்.

குறிப்பு

'நெடுங்காலம் தான் நினைந்து' - இதனுள் 'தான்' என்பது அளவுப் பொருளில் வந்துள்ளது.

'நெடுங்கால அளவும் நினைந்து' எனப்பொருள் கொள்ள வேண்டும்.

மிக வருந்தித் தேடிய பொருளால்
அடையும் சுகம் உடம்புக்கே அன்றி
உயிர்க்கு இல்லை

6. **உள்ளது ஒழிய வொருவர்க்கு ஒருவர்சுகம்**
கொள்ளக் கிடையா குவலயத்தில் - வெள்ளக்
கடலோடி மீண்டு கரையேறி னாலென்
உடலோடு வாழும் உயிர்க்கு

வெள்ளக்கடலோடி மீண்டு கரையேறினால் என்:-

மிக்க நீரை உடைய கடலின்கண் கப்பலின் மேல் ஏறிச்சென்று, பொருள்களைத் தேடிக்கொண்டு, திரும்பி வந்து கரைஏறித் தம்சொந்த ஊரிலே சிறப்பாக வாழ்ந்தாலும் என்ன?

ஒருவர்க்கு உள்ளது ஒழிய குவலயத்தில் ஒருவர் சுகம் கொள்ளக்கிடையா:-

ஒருவர்க்கு ஊழ்வினைப் பயனால் உண்டாகும் இன்பத்தைத் தவிர மற்றொருவர் பெற்றிருக்கும்

உயர்ந்த இன்பத்தை அடையும் பேறு அவர்க்கு இல்லையாம்.

உடலோடு வாழும் உயிர்க்கு என்:-

அன்றியே செல்வத்தால் பெறும் இன்பமும் உடம்பிற்கே அன்றி உயிர்க்கு என்ன பயனைச் செய்யும்?

விளக்கம்

ஒருவர் கடல் கடந்து சென்று பெரும்பொருளை ஈட்டினாலும் அப்பொருளால் தம் ஊழ்வினைக்குள்ள இன்பமே அனுபவிக்க முடியும். மற்றொருவர் அனுபவிக்கின்ற பெரிய சுகத்தை இவர்கள் அனுபவிக்க முடியாது. அன்றியே; தம்வீடு, நிலம், மற்றைய பொருள்கள் ஆகியவைகள் எல்லாம் உடல் ஒன்றுக்கே பயன்படுமேயொழிய உடலில் வாழும் உயிர்க்கு ஒரு சிறிதும் பயன்படா என்க.

'இவ்வுலகத்தில் மக்கள் தேடும் பொருளெல்லாம் உடல் ஒன்றுக்கே பயன்படும். உயிர்க்குப் பயன்படுவது இல்லை. பயன்படாவிட்டாலும் உயிர் அப்பொருள் மேல் பற்று வைத்து இறப்பதால், அவ்வுயிர்க்கு மேலும் மேலும் பிறவியே கிடைக்கும். அதற்கு வீடு பேறு கிடைக்காதென்க.

உடம்பின் இழிவை உணர்ந்த ஞானிகளின் நிலை

7. எல்லாப் படியாலும் எண்ணினால் இவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை - நல்லார்
அறிந்திருப்பார் ஆதலினால் ஆம்கமல நீர்போல்
பிரிந்திருப்பார் பேசார் பிறர்க்கு.

எல்லாப் படியாலும் எண்ணினால்:-

பற்றுள்ள உள்ள நிலை, பற்றில்லா உள்ள நிலை, என்னும் இருவகை உள்ளங்களில் தோன்றும் எல்லா எண்ணங்களாலும் ஆராய்ந்து பார்த்தாலும்

இவ்வுடம்பு பொல்லாப் புழுமலி நோய்ப் புன்குரம்பை:-

நமக்குக் கிடைத்துள்ள இவ்வுடம்பு தீங்குகளை உடைய, புழுக்கள் நிறைந்த, நோயினை உடைய, எளிமையை உடைய, சிறு குடிலாகும்.

நல்லார் அறிந்திருப்பார்:-

பற்றற்ற மெய்ஞ்ஞானிகள் இவ்வுடம்பின் இழிவை நன்கு அறிந்திருப்பர்.

ஆதலினால் ஆம்கமல நீர்போல் பிரிந்திருப்பர்:-

உணர்ந்த அக்காரணத்தினால், வளரும் தாமரைக் கொடியின் இலைமேல் உள்ள தண்ணீர் போல் இவ்வுலக வாழ்க்கையைத் துறந்திருப்பார்.

பிறர்க்குப் பேசார்:-

தாம் இவ்வுலக வாழ்க்கையைத் துறந்திருப்பது பற்றிப் பிற மக்களிடம் எதுவும் பேசார்.

ஆனால் உலக மக்களோடு கூடி அவர்களுக்கு வேண்டிய நன்மையைச் செய்து கொண்டிருப்பர்.

மேற்கோள்

'தாமரை இலைத் தண்ணீர் போல் சகத்தொடும்
கூடி வாழ்வார்'

(கைவல்ய நவநீதம்)

'பிரிந்திருப்பார் என்பது சீவன்முத்த நிலை'

இப்பாட்டின் பொருளை 'இடும்பைக்கு' என்னும் பாடலாலும் உணர்க.

ஒருவன் தேடிக் கைகொள்ள
வேண்டியது மரியாதையே

8. ஈட்டும் பொருள்முயற்சி எண்ணிறந்த ஆயினும்ஊழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாம் - தேட்டம்
மரியாதை காணும் மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணும் தனம்.

ஈட்டும் பொருள் முயற்சி எண்ணிறந்த ஆயினும் ஊழ் கூட்டும்படி யன்றிக் கூடாவாம்:-

பொருளைத் தேடி அடைதற்குரிய முயற்சிகள் உலகத்தில் பலவாய் இருப்பினும் நம் ஆகூழாகிய ஊழ்வினை கூட்டும்படி அன்றித் நம்மிடம் பொருள் வாராவாம்.

மகிதலத்தீர் தேட்டம் மரியாதை காணும்:-

பெருமைக்குரிய இவ்வுலகத்தில் வாழும் மக்களே! நாம் தேடி அலைய வேண்டியது (பொருளன்று) மரியாதை என்னும் தகுதியாகும்.

கேண்மின் தனம் தரியாது காணும்:-

நான் சொல்வதை நன்றாகக் கேளுங்கள். பல தொழில் முயற்சியால் தேடுகின்ற பொருள் நல்வினை இல்லாவிட்டால் நம்மிடம் நிலைத்திராது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

விளக்கவுரை

இப்பாட்டு தொல்காப்பியம் அகத்திணையியலுள் 'தாளாண் பக்கமும், தகுதியது அமைதியும்' (44) என்றபடி, ஒருவன் பொருள் தேடுவதற்கு உலகத்தில் பலவழிகள் இருந்தாலும், தம்தம் தகுதிக்கு ஏற்றபடி, தொழில்களைச் செய்ய வேண்டும்' என்ற கருத்தை உணர்த்துகிறது.

'தாளாண் பக்கமும் தகுதியது அமைதியும்'

என்ற நூற்பாவின் பொருளை இளம்பூரனர் உரையை நோக்கி அறிக.

இப்பாட்டில் 'ஈட்டும் பொருள்முயற்சி எண்ணிறந்த' என்பது தாளாண் பக்கமாகும்.

'தேட்டம் மரியாதை காணும்' என்பது தகுதியது அமைதியாகும். தகுதி என்னும் மரியாதையை இக்காலத்தார் சுயமரியாதை என்பர்.

நற்குடியில் பிறந்தார், வறுமையுற்ற காலத்தும் இரந்தவர்க்கு இல்லையெனா மாட்டார்

9. [1]ஆறு பெருக்குஅற்று அடிசுடும்அந் நாளும்அவ்வாறு ஊற்றுப் பெருக்கால் உலகுஊட்டும் - ஏற்றவர்க்கு நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும் இல்லை எனமாட்டார் [2]இருந்து

பாடபேதம்:-

(1) ஆற்றுப் பெருக்கு அற்று

(2) இசைந்து

ஆறு பெருக்குஅற்று, அடிசுடும் அந்நாளும்:-

ஆறானது மழைக்காலத்தில் வெள்ளப் பெருக்கு அற்று நடப்பவருடைய காலைக் சுடுகின்ற மழை யில்லாத வறண்ட காலத்திலும்.

அ ஆறு ஊற்றுப் பெருக்கால் உலகு ஊட்டும்:-

அதே ஆறானது கீழ் நீராகிய ஊற்றுப் பெருக்கால் உலக மக்களையெல்லாம் உண்பிக்கும்.

நல்ல குடிப் பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்:-

இல்லறம் நடத்தும் நல்ல குடியில் பிறந்த நன்மக்கள் வறுமை மிகுந்தாராயினும்.

இருந்து ஏற்றவர்க்கு இல்லை என மாட்டார்:-

தாம் உயிரோடு இருந்து இரந்தவர்க்கு இல்லை என்று கூறமாட்டார்.

கருத்துரை

'ஆற்றுப் பெருக்கற்று' என்ற பாடம் எதுகைக்குச் சிறந்தது. அது ஏழாம் வேற்றுமைப் பொருளில் வந்துள்ளது.

'ஆறு பெருக்கற்று' என்ற பாடம் எழுவாய் வேற்றுமை ஆகும். இதுவே சிறந்த பாடமாகும். மேலும் 'ஆறு பெருக்கற்று என்பதற்கு ஊற்றுப் பெருக்கால் என்பது ஒற்று இடைப்பட்ட எதுகை யாகும் (யாப்பருங்கல விருத்தி)

விளக்கம்

ஆறு அடி சுடும் அந்நாளும் உலகினுக்கு ஊற்றுப் பெருக்கால் உலகு ஊட்டுவது போலக் குடிப் பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும் ஏற்றவர்க்குத் தான் உயிரோடு இருந்து இல்லை என மாட்டார் என வருதலின் இது எடுத்துக்காட்டு உவமை அணி யாகும்.

இறந்து போனவர்களுக்காக அழுது புரண்டு வருந்தாமல் நமக்கும் அதுவழியே எனக்கருதி அறம் செய்க என்றது

10. ஆண்டுஆண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ? மாநிலத்தீர் - வேண்டா நமக்கும் அதுவழியே நாம் போம் அளவும் 'எமக்கு என்?' என்று இட்டு உண்டு இரும்.

மாநிலத்தீர் - உலக மக்களே!

ஆண்டு ஆண்டு தோறும் அழுது புரண்டாலும்:-

நீங்கள் உறவினர்கள் இறந்துவிட்டால் அவர்கள் இறந்துபோன அந்த அந்த இடந்தோறும் சென்று அழுது புரள்வீர்கள். அவ்வாறு அழுது புரண்டாலும்.

மாண்டார் வருவரோ:-

இறந்து போன அவர்கள் திரும்பி வருவார்களோ? (திரும்பி வாரார் என்க)

வேண்டா:-

ஆதலால் அழுது புரள்கின்ற அநாகரிக வழக்கத்தைச் செய்யாதீர்கள்.

நமக்கும் அது வழியே:-

நமக்கும் அவ்விறப்பே செல்லும் வழியாகும்.

நாம் போம் அளவும்:-

நாம் இறந்துபோகும் காலம் வரையிலும்,

'எமக்கு என்?, என்று:-

எங்களுக்கு இந்த உலகில் செய்யவேண்டிய செயல் என்ன என்று ஆராய்ந்து கொண்டு, நாம் செய்ய வேண்டியவற்றைத் துணிந்து கொண்டு.

இட்டு உண்டு இரும்:-

பிறர் இட உண்ணுதலும், நாம் பிறர்க்கு இடாமல் உண்ணுதலும் ஆகிய இரண்டையும் நீக்கி விட்டுப் பிறர்க்கு இட்டே உண்டு வாழ்வீராக.

பிறர் இட உண்ணும் இழிவை, 'பிச்சைக்கு மூத்த குடி வாழ்க்கை' (நல்வழி-14) என்னும் பாடலால் உணர்க.

இட்டுண்கையின் சிறப்பை,

'வித்தும் இடல் வேண்டும் கொல்லோ-விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்'. (85)

என்னும் குறளால் அறிக.

குறிப்பு

ஆண்டு ஆண்டு என்பது காலத்தைக் குறிக்காது இடத்தைக் குறிக்கும்.

'ஆண்டு ஆண்டு தோறும்' என்பதற்குக் காலத்தைக் குறித்ததாகக் கொண்டு 'வருடம் தோறும்' என்று உரை கொள்வாரும் உளர்.

வயிறு செய்யும் தொண்பம்

11. 'ஒருநாள் உணவை ஒழி.' என்றால் ஒழியாய்
இருநாளுக்கு ஏல்' என்றால் ஏலாய்; ஒருநாளும்
என்நோவு அறியாய்; இடும்பை கூர் என்வயிறே!
உன்னோடு வாழ்தல் அரிது!

இடும்பை கூர் என்வயிறே!:-

துன்பம் மிகுதற்கு உரிய என் வயிறே!

ஒரு நாள் உணவை ஒழி என்றால் ஒழியாய்,
இரு நாளுக்கு ஏல் என்றால ஏலாய்:-

கிடைக்காத பொழுது ஒரு நாள் உண்ண வேண்டிய உணவை விட்டு இரு. என்றால் நீ விட்டு இராய்; கிடைத்த பொழுது இரண்டு நாட்களுக்கு உண்ணும் உணவை ஒருங்கு ஏற்றுக்கொள் என்றால் ஏற்றுக் கொள்ளமாட்டாய்.

ஒரு நாளும் என் நோவு அறியாய்:-

ஒவ்வொரு நாளிலும் யான் உணவு தேடுதலுக்குப் படும் துன்பத்தை நீ அறிந்திராய்.

உன்னோடு வாழ்தல் அரிது:-

ஆதலால் இத்தகைய இயல்பு வாய்ந்த உன்னோடு யான் கூடி வாழ்தல் அருமையாக இருக்கிறது.

குறிப்பு

'இடும்பை கூர் வயிறு' என்றது உண்ணாத பொழுது பசியினாலும்; உண்ட பொழுது செரியாமை முதலிய நோயினாலும் துன்பம் செய்கின்ற வயிறு என்க.

கூர்தல் - மிகுதல்.

உழவுத் தொழில் சிறப்பு

12. 'ஆற்றங் கரையின் மரமும் [1]அரசதனில்
[2]வீற்றிருந்தான் வாழ்வும் விழும்அன்றே - ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்புஇல்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு'

பாடபேதம்

1. அரசறிய
2. வீற்றிருந்த

ஆற்றங் கரையின் மரமும்:-

ஆற்றினது கரையில் இருக்கின்ற மரத்தினது வாழ்வும்.

அரசதனில் வீற்றிருந்தான் வாழ்வும்:-

ஒரு அரசின்கண் சிறப்பாக வீற்றிருந்தவனுடைய வாழ்க்கையும்,

விழும் அன்றே:-

இவ்விரண்டும் பிற்காலத்தில் நிலைத்திராமல் அழிந்துவிடும் அல்லவா?

உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பு இல்லைஏற்றம் கண்டீர்:-

உழுது, பயிர் செய்து உண்டு வாழ்வதே உயர்வாகும் என்பதை அறிந்தீராயிரும்.

வேறு ஓர் பணிக்குப் பழுது உண்டு

உழும் தொழில் அல்லாத மற்ற தொழில்களுக்கு எல்லாம் இடையூறு உண்டு என்பதை அறிவீராக.

உழு தொழில் சிறப்பு:-

உழுதொழில் செய்கின்ற ஒருவன் தனக்குரிய நன் செய் நிலத்தாலும், புன்செய் நிலத்தாலும் தோட்டக் கால் நிலத்தாலும்; தனக்கும், தன்னைச் சார்ந்தவர் களுக்கும் வாழ்க்கைக்கு வேண்டிய பெரும்பாலான பொருள்களை எல்லாம் உண்டாக்கிக்கொள்கின்றான். இதனைக்கருதி பாரதியார் 'காணி நிலம் வேண்டும்' எனப் பாடுகின்றார்.

குறிப்பு

இப்பாட்டால் அக்காலத்தில் இருந்த அரசுகள் அடிக்கடி அழிந்து போவதையும், அது அழியுங்கால் அவ்வரசில் இருந்தவர்க்கு உண்டாகும் அழிவையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

இறைவன் காட்டியவழி உலகம் நடக்கும்

13. ஆவாரை யாரே அழிப்பார்? அதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பவர்? [1]போகாரை
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்
மெய்யம் புவியதன் மேல்!

பாடபேதம்:-

(1) ஓவாமல்

அம் புவியதன் மேல்:-

அழகிய நிலவுலகத்தின்கண்

மெய்:-

உண்மையாக

ஆவாரை யாரே அழிப்பார்:-

நல்வினையினால் நெடுங்காலம் உயிர்வாழ் வதற்கு உரியவரை இடையிலே அழிப்பவர் யார்?

அதுவன்றிச் சாவாரை யாரே தவிர்ப்பவர்:-

அதுவல்லாமல் தீவினைப் பயனால் இறத்தற்கு உரியவரை சாவாமல் நிறுத்த வல்லவர் யாரோ?

போகாரை ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்:-

பிச்சைக்குப் போகாதவரையும், பிச்சைக்குப் போகின்றவரையும் தடுக்க வல்லவர் யார்?

அவர்கள் வினைவழி இறைவன் இயக்குதலால் இதைத் தடுப்பவர் ஒருவரும் இல்லை.

'ஆவன ஆவ அழிவ அழிவன
போவன போவ புகுவ புகுவன
காவலன் பேர்நந்தி காட்டித்துக் கண்டவன்
ஏவன செய்யும் இளங்கிளையோனே'

(திருமந்திரம்–504)

என்னும் திருமந்திரத்தை அடியொற்றி வந்தது மேற் கண்ட நல்வழிப் பாடலாகும்.

இப்பாட்டு திருமந்திரம் இரண்டாம் தந்திரத்துள் பாத்திரம் என்ற தலைப்பிலும், எட்டாம் தந்திரத்துள் மத்திய சாக்கிராவத்தை (2175) என்னும் தலைப்பி லும் வந்துள்ளதை அறிஞர்கள் ஆராய்க.

இப்பாட்டின் பொருள்

ஆவன ஆகும். அழிவன அழியும். போவன போகும். புகுவன புகும். இவையெல்லாம் காவல னாகிய பெரியநந்தி காட்டியபடிநடப்பவை என்பதைக்

கண்டு அந்நந்தி ஏவியபடி செய்ய வல்லவன், அந் நந்திக்கு அடியனாவான் என்பது பொருளாகும்.

இப்பாட்டு திருமந்திரத்தில் சற்பாத்திரம் என்ற தலைப்பிலும், கேவலசாக்கிரம் என்ற தலைப்பிலும் வந்துள்ளதால் அதற்கு அமையுமாறு பொருள் கூறிக் கொள்க.

மேற்படி பாட்டில் ஆவன ஆகும், அழிவன அழியும், போவன போகும், புகுவன புகும் என்று நான்கு செய்திகள் வந்துள்ளன. இந்த நல்வழிப் பாட்டிலும் நான்கு செய்தி இருக்க வேண்டும் என்க.

'ஓவாமல்' எனப் பாடம் கொள்வார்க்கு நான்கு செய்தி கிடைக்காது.

இரந்துண்பவரின் இழிவை இப்பாட்டு உணர்த்துகின்றது.

14. பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சை பலசொல்லி இடஉண்கை[1] சிச்சீ!
வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது
உயிர்விடுகை சால உறும்.

பாடபேதம்

இடித்துண்கை.

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்:-

பிச்சை எடுக்கும் தொழிலுக்கே உரியவராய் அத் தொழிலின்கண் முதிர்ந்த குடிவாழ்க்கை செய்பவரின் இயல்பினை எடுத்துச் சொல்லின்.

இச்சை பலசொல்லி இடஉண்கை:-

கொடுப்பவர்க்கு இச்சையான பல சொற்களை எல்லாம் எடுத்துக் கூறி அவர்கள் கொடுக்கத் தாம் உண்பதுவேயாகும்.

சிச்சீ!:-

சீ! சீ!.

வழிறு வளர்க்கைக்கு மானம் அழியாது உயிர்விடுகை சால உறுமு:-

தாம் வயிற்றை வளர்த்தற்பொருட்டு இந்த இழிவான செயல்களைச் செய்து, தன் பெருமைகெட்டு இருத்தலைக் காட்டிலும் தம் உயிரைப் போக்கிக் கொள்ளுதலே மிகவும் உறுதியான செயல் என்க.

விளக்கவுரை

சீ இகழ்ச்சியைக் குறிக்கும் இடைச்சொல்; அது அடுக்கி, சிச்சீ என்று வந்தது.

இல்லறம் என்னும் நல்லறம் நடத்துபவரெல்லாம் தாம் உழைத்துப் பொருள் தேடி, அப்பொருளால் உணவைப் படைத்துக் கொண்டு அவ்உணவை விருந்தினர் முதலான பிறர்க்கு ஊட்டி அதன் பிறகே தாம் உண்பார்.

இதனாலே ஔவையார் ஆத்திசூடியில் ''ஐயம் இட்டு உண்'' என்றார். உண்பதில் இட்டு உண்பதே சிறப்புடையது. இடாமல் உண்பதும், பிறர் இட (பிச்சை) உண்பதும் சிறப்புடையனஅல்ல.

அவ்விரண்டில் 'இட உண்ணலாகிய' பிச்சை எடுத்தல் மிகமிக இழிந்தது என்பதை இப்பாட்டு குறிப்பிடுகின்றது.

'இடித்துண்கை' என்ற பாடம் சிறப்பில்லாப் பாடம் என்க.

"'இச்சை பல பேசி இடித்துண்கை'' என்பது பொருத்தமான பாடமாகத் தெரியவில்லை. அதற்கு 'இச்சை பலபேசி இட உண்கை' என்றோ, 'இச்சை பலபேசி இரந்துண்கை' என்றோ பாடம் கொள்வது நன்று.

'போனகம் என்பது தான்உழந்து உண்டல்'

(கொன்றைவேந்தன்–69)

அதிசூக்கும பஞ்சாக்கரத்தின் சிறப்பு

15. சிவாய [1]சிவவென்று சிந்தித்து இருப்போர்க்கு
[2]அவாயம் ஒருநாளும் இல்லை [3]உவாயம்
இதுவே மதியாகும் அல்லாத எல்லாம்
[4]விதியேய் மதியாய் விடும்.

பாடபேதம்

1) நம
2) அபாயம்
3) இதுவே
4) விதியே

கருத்து

'நமசிவய' என்பது தூல பஞ்சாக்கரமாகும்
'சிவயநம' என்பது சூக்கும பஞ்சாக்கரமாகும்
'சிவயசிவ' என்பது அதிசூக்கும பஞ்சாக்கரமாகும்

இம்மூன்று பஞ்சாக்கரத்துள் அதிசூக்கும பஞ்சாக் கரத்தைப் பற்றி வந்தது இப்பாடலாகும்.

சிவாய சிவவென்று சிந்தித்து இருப்போர்க்கு அவாயம் ஒரு நாளும் இல்லை:-

திருஐந்தெழுத்துள் திரோதமலத்தை உணர்த்தும் நகார எழுத்தையும், ஆணவ மலத்தை உணர்த்தும் மகார எழுத்தையும் நீக்கிவிட்டு, சிவாய என்ற மூன்று எழுத்தை எடுத்துக் கொண்டு, அம்மூன்றுடன் ஐந் தெழுத்து ஆதற்பொருட்டு சிவ என்கின்ற சொல்லைச் சேர்த்து, சிவாயசிவ என்று உச்சரித்து இருப்பார்க்கு நகார, மகாரங்களால் உணர்த்தப்படும் திரோத மலமும், ஆணவ மலமும் ஆகிய இரண்டு அவாயங் களும் ஒரு காலத்திலும் இல்லையாம்.

உவ ஆயம் இதுவே மதியாகும்:-

இந்த ஆயமாகிய சிவாயசிவ என்னும் இதுவே சிறந்த திருவருள் அறிவால் கொள்ளத்தக்கதாம்.

'உவ' என்பது சுட்டுப்பொருளில் வந்தது. இதனை 'உவக்காண்' (1185) என்ற திருக்குறளை நோக்கி அறிக.

'ஆயம்' என்பது சிவம் முதலான முப்பொருள் கூட்டத்தை.

அல்லாத எல்லாம் விதியேய் மதியாய்விடும்:-

திரோத மலத்தையும், ஆணவ மலத்தையும் குறித்துவரும் 'நமசிவய' 'சிவயநம' என்பவற்றைச்

சேர்த்து ஒலிப்பதெல்லாம் ஒருவருடைய விதியின்படி கருதப்படும் மதியாகும்.

எனவே, விதியின்படி கருதப்படாதது 'சிவயசிவ' என்பதாகும்.

'சிவயநம' என்பது மலத்தொடு கூடியது.

'சிவய' என்பது மலத்தொடு கூடாதது.

இக்கருத்தை 'ஓதும் சிவாய மல மற்ற உண்மையே' (2712) என்னும் திருமந்திரப் பாட்டால் உணர்க.

விளக்கவுரை

'சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே யடிமைய தாக்கிச்
சிவாய சிவயென்றே சிந்தையின் கண்ணே
அவாயம் கெடநிற்க ஆனந்தம் ஆமே

(திருமந்திரம்–2718)

இப்பாட்டு திருமந்திரத்தின் ஒன்பதாம் தந்திரத்தில் 'அதிசூக்கும பஞ்சாக்கரம்' என்ற தலைப்பில் உள்ளது.

இப்பாட்டின் ஈற்றடி இரண்டும் 'சிவாய சிவயென்றே சிந்தையின் கண்ணே, அவாயம் கெடநிற்க ஆனந்தமாமே' என வருதலால் 'சிவாயசிவ' என்பது அதிசூக்கும பஞ்சாக்கரம் என்றும் அப்பஞ்சாக்கரம் நகார, மகாரங்களாகிய 'அவாயம் கெட' நிற்க வேண்டும் என்றும் தெரிகின்றன.

இத்திருமந்திரப் பாடலைக் கருதி மேற்கண்ட நல்வழிப் பாட்டின் பாடபேதங்களை உணர்ந்து

கொண்டேன். இப்பாடபேதத்தை அறிஞர் நன்கு ஆராய்ந்து உணர்வாராக.

மேற்கூறிய கருத்தை 'ஓதும் சிவாய மலமற்ற உண்மையே' (2712) என்ற திருமந்திரப் பாடலாலும்,

'ஆசுறு திரோதம் மேவாது அகலுமா?
சிவம் முன்னாக ஓசைகொள்'

(சிவப்பிரகாசம்–92)

என்னும் பாடலாலும் அறிக.

இப்பாட்டிற்கு ஆணவ மலத்தோடு கூடிய திரோதமல எழுத்துக்களாகிய 'நம' என்பது மேவாமல் அகலும்படி எஞ்கிய மூன்றெழுத்தில் 'சி' எழுத்து முன்னாகும்படி உச்சரிப்பாயாக என்பது பொருளாகும்.

இச்சிவப்பிரகாசர் பாட்டும் 'அதிசூக்கும பஞ்சாக் கரத்தை' உணர்த்துகின்றது.

சிவாய சிவ என்று சிந்தித்து இருத்தலாவது:-

என்பதற்குப் பின்வரும் கட்டுரையை ஓதிஉணர்க.

ஐந்தெழுத்து

சிவாகமங்கன் 'சிவ' என்கின்ற சொல்லை வேர்ச் சொல்லாகக் கொண்டு, நான்காம் வேற்றுமைப் பொருளை உணர்த்தும் 'ய' காரத்தை, அதனுடன் சேர்த்து, 'சிவய' என்று ஆக்கி, அதனுடன் வணக்கம் என்று பொருள்படும் 'நம' என்ற வினைச் சொல்லை யும் சேர்த்து 'சிவயநம' என்று ஆக்கிக்கொண் டுள்ளன.

இதற்குச் சிவனுக்கு வணக்கம் என்பது பொருளாகும். வினைமுற்றுச் சொல்லை, முன்வைத்து, பெயரை ஈற்றில் வைத்து, சேர்த்துச் சொல்லும் முறையில் கூறினால் நமசிவய என்று ஆகும். இதற்கு 'வணக்கம் சிவனுக்கு' என்பது பொருளாகும். பெயர்ச் சொல்லை முதலில் வைத்து வினைச் சொல்லை ஈற்றில் வைத்துச் சேர்த்துச் சொல்லும் முறையில் கூறினால் 'சிவயநம' என்று ஆகும். இதற்குச் 'சிவனுக்கு வணக்கம்' என்பது பொருளாகும்.

இந்த இரண்டு முறைகளில் அறிஞர் 'நமசிவய' என்பதைத் தூல பஞ்சாக்கரம் என்றும், 'சிவயநம' என்பதைச் சூக்கும பஞ்சாக்கரம் என்றும் வழங்கி வருகின்றனர்.

தூல பஞ்சாக்கரத்தில் வினை முதலாக உள்ளது. சூக்கும பஞ்சாக்கரத்தில் பெயர் முதலாக உள்ளது. இந்த இரண்டு வழக்கங்களையும் திருமுறை முதலானவற்றில் நாம் பார்க்கின்றோம்.

வேறுமுறை

திருமூலர் முதலான தத்துவ ஞானிகள் சமயப் பொருள்களை, பேற்றினைப் பெறும் சீவன் ஒன்று, பேற்றினை உதவும் அருள் என்னும் பரன் ஒன்று, பேறாய் இருக்கும் சிவம் ஒன்று, பேற்றினைப் பெறும் சீவனிடத்தில் இயல்பாய் உள்ள ஆணவ மலம் ஒன்று, அந்த ஆணவ மலத்தை இயக்கும் பரனிடம் உள்ள திரோதமலம் ஒன்று, என ஐந்து பொருள்களாக வகுத்துக் கொண்டனர்.

இந்த ஐந்து பொருள்களையும் திரு ஐந்தெழுத்தில் வைத்துக் கணிக்கக் கருதி, 'ய'காரத்தைச் சீவனுக்கும், 'வ'காரத்தை அருளாகிய பரனுக்கும், 'சி'காரத்தைச் சிவனுக்கும், 'ந'காரத்தைத் திரோதமலத்திற்கும், 'ம'காரத்தை ஆணவமலத்திற்கும் உரியதாக்கினர்.

தொடக்க முறையில் 'நகார' 'மகார'ங்களாகிய மல எழுத்தை முன்வைத்து, 'நமசிவய' என்றும்,

இரண்டாம் முறையில் 'நகார' 'மகார'ங்களாகிய மல எழுத்தை ஈற்றில் வைத்துச் 'சிவாயநம' என்றும்,

மூன்றாம் முறையில் மல எழுத்துக்களை நீக்கி விட்டு, 'சி'காரத்தை முதலாக்கிச் 'சிவய' என்றும் வழங்கினர். அச் 'சிவய' என்பதுடன் ஐந்து எழுத்து ஆதற் பொருட்டு, 'சிவ' என்பதைச் சேர்த்து 'சிவயசிவ' என்றும் வழங்கினர்.

இந்த முறையில் 'நம சிவய' என்பதைத் தூல பஞ்சாக்கரம் என்றும், 'சிவயநம' என்பதைச் சூக்கும பஞ்சாக்கரம் என்றும், 'சிவய' (அல்லது) 'சிவயசிவ' என்பதை அதிசூக்கும பஞ்சாக்கரம் என்றும், அறிஞர் வழங்கி வருதலாகினர்.

அதிசூக்கும பஞ்சாக்கரத்தில் 'நகார', 'மகார'ங்களாகிய மலஎழுத்துக்கள் இல்லாமையால் இதனை 'அவம் நீங்கிய பஞ்சாக்கரம்' (அல்லது) 'அவாயம் நீங்கிய பஞ்சாக்கரம்' எனவும் வழங்கி வருவராகினர்.

திருமந்திரத்தில் அபாயம், உபாயம் என்கின்ற சொற்கள் வரவில்லை. அதிசூக்கும பஞ்சாக்கரத்தைச்

சொல்லுமிடத்தில் 'அவாயம்' என்கின்ற சொல் வருகின்றது. மற்றோர் இடத்தில் 'அவம்' என்கின்ற சொல் வருகின்றது. இந்தத் திருமந்திரத்தை நல்வழி பின்பற்றியதாகையால் திருமந்திரப்படி நல்வழி 15 ஆம் பாடல் பாடம் கொள்ளப்பட்டது.

ஒன்றினால் ஒன்று சிறத்தல்

16. தண்ணீர் நிலநலத்தால் தக்கோர் குணங்கொடையால்
கண்ணீர்மை மாறாக் கருணையால்-பெண்ணீர்மை
கற்பழியா வாற்றால் கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதமாம் என்றே யறி.

பொழிப்புரை

கடல் சூழ்ந்த இந்த மண்ணுலகத்திலே, தண்ணீரின் தன்மை அது இருக்கும் நல்ல நிலத்தின் தன்மையினாலும், நல்லோருடைய நற்குணமானது அவர்களிடத்தில் உள்ள கொடைத் தொழில் முதலான சிறந்த தொழில்களாலும், கண்ணின் நல்ல தன்மை மாறாத அன்பு, ஆர்வம், அருள் இவை அடங்கிய கருணைப் பண்புகளாலும், பெண்களுடைய நற்பண்பானது, கற்பு முதலான நல்ல மாண்புகளைப் பெற்றிருத்தலாலும், மிக்கு விளங்கும் என்க.

'அதி, பூதம்' என்கின்ற சொல் அத்புதம் என்றாயிற்று. இவ்வடசொல் தமிழில் அற்புதம் எனத் திரிந்தது.

இதன் பொருள்:- ஒரு பொருள் மிகச் சிறந்திருத்தலாகும் கற்பு முதலான மாண்புகளைப் பற்றி,

'கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்இயல் பொறையும், நிறையும் வல்லிதின்
விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்'

(தொல்–கற்பு–11–14)

என்னும் இந்த நூற்பாவால் உணர்ந்துகொள்க.

தீவினையே வறுமைக்குக் காரணம்

17. செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம் - வையத்து
அறும்பாவம் என்னவறிந்து அன்றிடார்க்கு இன்று
வெறும்பானை பொங்குமோ மேல்.

வையத்து அறும்பாவம் என்ன அறிந்து அன்றிடார்க்கு:-

இந்த உலகத்தில் நல்வினை, செய்தால் பாவம் நீங்கும் என்பதை நன்றாகத் தெரிந்துகொண்டு, முற்காலத்தில் கொடுத்தல் முதலான நல்வினையைச் செய்யாதவர்க்கு,

செய் தீவினை இருக்க தெய்வத்தை நொந்தக்கால இருநிதியம் இன்று எய்த வருமோ:-

தாம் செய்த தீவினையானது பயன்தருவதற்காக வந்துகொண்டிருக்க, 'இவர் அதை அறியாராய், தெய்வத்தைக் கருதி நல்லது வரவேண்டும் என்று வருந்தி வேண்டிக் கேட்டுக் கொண்டிருந்தால், அந்த வேண்டுதலால் பெரிய செல்வம் இன்று வந்து விடுமோ?

வெறும்பானை பொங்குமோ மேல்:-

பானை ஒன்று மட்டும் இருக்க, உலைக்கு இடும் அரிசியும் உலைத் தண்ணீரும், உலைத் தீயும் ஆகிய

இணைகள் இல்லாத வெறும் பானை உணவைத் தருவதற்காக மேலே பொங்குமோ? பொங்காதென்க.

விளக்கவுரை

முன்னே நம்முடைய பாவம் அழிவதற்காக இடுதல் முதலான நல்லறத்தை அன்று செய்யாத வர்க்கு இன்று தெய்வத்தை வேண்டிக் கொண்டாலும், இருநிதியம் கிட்டுமோ? செய்தீவினை - இறந்த கால வினைத்தொகை.

தெய்வம்: இதனைத் தொல்காப்பியர் பாலறி தெய்வம் என்பர். பாலறி தெய்வமாவது: நல்வினை யாகிய பாலையும், தீவினையாகிய பாலையும் அறிந்து அவற்றிற்கு உரிய பயன்களை உயிர்களுக்குத் தரும் தெய்வம் என்க.

உலோபிகளின் இயல்பு

18. பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்
உற்றார் உகந்தார் எனவேண்டார் - மற்றோர்
இரணம் கொடுத்தால் இடுவர் இடாரே
சரணம் கொடுத்தாலும் தாம்.

பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில் உற்றார் உகந்தார் எனவேண்டார்:-

(பற்றுள்ளம் என்னும் இவற்றன்மையை உடைய உலோபிகள்) இவர் நம்மைப் பெற்ற தாய்தந்தையர் எனவும், இவர் நம்மோடு உடன் பிறந்த அண்ணன், தம்பி, அக்காள், தங்கை எனவும், இவர் நாம் பிறந்த பெரிய நாட்டிற்கு உரியவர் எனவும், இவர் இப்பெரிய உலகில் சுற்றத்தார் எனவும், இவர் கல்வி முதலான

வற்றால் உயர்ந்தவர் எனவும் கருதி அவர்களுக் கெல்லாம் ஒரு பொருளும் கொடுக்க விரும்பார்.

மற்றோர் இரணம் கொடுத்தால் இடுவர்:-

மேலே குறிப்பிட்ட நண்பர்கள் அல்லாத பகைவர் தம்மிடம் வந்து போரிட்டுக் காலால் உதைத்தால் கொடுப்பார்.

(மற்றோர் - பகைவர்)

தாம் சரணம் கொடுத்தாலும் இடாரே:-

ஏனையோராகியதாம் காலைத் தொட்டு, சரணம் என்று கூறி வணங்கிக் கேட்டலும் கொடார்.

விளக்கவுரை

ரணம் என்னும் வடசொல்லிற்குப் போர் என்பது பொருள். இவ்வடசொல் வடமொழி ஆக்க விதியின் படி இகரம் பெற்று இரணம் என வழங்கிற்று. எனவே 'இரணம்' என்பது வடமொழி திரிந்த தமிழ்ச் சொல் லாகும்.

பெரியோர்களைக் கண்டால் அவர்களுடைய காலைத் தொட்டுச் சரணம் என்று கூறி வணக்கம் செய்ய வேண்டும். இந்த மரபு இன்னும் பல சமூகத்தாரிடம் உள்ளது. குறிப்பாக வீரசைவரிடத் தில் வழக்கில் உள்ளது.

'உகப்பே உயர்வு' என்னும் தொல்காப்பிய நூற்பா விதியால் உகப்பு என்பது உயர்வு என்னும் பொருளில் வந்துள்ளது, அதனால் கல்வி முதலான வற்றால் உயர்ந்தோர் என உரை கூறப்பட்டது,

'இரணம் கொடுத்தல்' என்றால் போரிட்டு அடி, உதை கொடுத்தல்.

மூன்றாம் அடியில் மேற்கதுவாய் மோனைத் தொடை அமைந்துள்ளது.

சரித்தல் — நடத்தல்; இச்சொல் பாதத்தை உணர்த்தும் வடசொல்லாகும்.

அரிய உடம்பை வயிற்றுப் பிழைப்புத்
தொழில்களிலேயே ஈடுபடுத்திப்
பாழாக்குகிறோம் என்று வருந்துதல்

19. சேவித்தும் சென்று இரந்தும் தெள்நீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும் போவிப்பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம்.

வயிற்றின் கொடுமையால் நாழி அரிசிக்கு நாம்:-

வயிற்றில் உண்டாகும் பசிக்கொடுமையினால் அதனைத் தீர்த்தல் பொருட்டு, நாழி என்னும் அளவுள்ள அரிசியைப் பெறும் பொருட்டு நாம்,

உடம்பை பாழின்போவிப்பம்:-

மக்களாகிய நாம் அருமையாகக் கிடைத்த மக்கள் உடம்பைப் பயனில்லாத செயல்களில் செல்லவிடு வோம். பயனில்லாத செயல்கள் எவை?

சேவித்தும் சென்று இரந்தும் தெள்நீர் கடல்கடந்தும் பாவித்தும் பாராண்டும் பாட்டு இசைத்தும்:-

பிறரை வழிபட்டும், பிறரிடம் சென்று பிச்சை எடுத்தும், தெளிந்த நீரை உடைய கடலைக் கடந்து

வெளிநாடு சென்று பொருளைத் தேடியும், பிறரைப் போல் வேஷமிட்டு நடித்தும், உலகத்தை ஆட்சி செய்தும், பிறர் மேல் பாடல்களைத் தொடுத்தும் செயல்படும் இவைகள் என்க.

விளக்கவுரை

உடம்பையும், உயிரையும் பெற்ற நாம் நிலையற்ற உயிர்க்காக எந்தக் காரியங்களையும் செய்யாமல், உடம்பைப் பற்றி நின்று வயிற்றுப் பிழைப்பிற்காகவே பல காரியங்களைச் செய்கின்றோம். உடம்பு அழிந்து போகுமாதலின் அதனைக் கருதிச் செய்யும் செயல்களெல்லாம் பயனில்லாமல் போகின்றன. உயிர் வீடுபேறாகிய பயனைப் பெறுவதற்கு நல்ல காரியங்கள் செய்ய வேண்டும் என்க.

விலை மகளிர் களியாட்டத்தால் வரும் தீங்குகள்

20. அம்மித்துணையாக ஆறுஇழிந்த ஆறுஒக்கும்
கொம்மை முலைபகர்வார் கொண்டாட்டம்-இம்மை
மறுமைக்கும் நன்று அன்று மாநிதியம் போக்கி
வெறுமைக்கு வித்தாய் விடும்.

பாடபேதம்

அம்மித் துணையால்

கொம்மை முலைபகர்வார் கொண்டாட்டம்:-

திரண்ட தங்களுடைய முலையை, விற்றுப் பிழைக்கும் பரத்தையருடன் கூடிக் காமக் களியாட்டம் செய்வது எத்தகையது எனில்.

அம்மி துணையாக ஆறுஇழிந்த வாறு ஒக்கும்:-

நீரில் மிதக்கும் இயல்பைப் பெறாமல், ஆழும் இயல்பை உடைய அம்மி போன்ற நீந்தத் தெரியாத மக்களைத் துணையாகக் கொண்டு, பேராற்றுப் பெருவெள்ளத்தில் இறங்கியவருடைய கதியை ஒவ்வும் என்க. இதனால் இருவரும் தண்ணீரில் அமிழ்ந்து போவர் என்க.

இம்மை மறுமைக்கும் நன்று அன்று மாநிதியம் போக்கி வெறுமைக்கு வித்தாய் விடும்:-

விலை மகளிருடன் நாம் செய்யும் காமக்களியாட்டம், இந்த உலக வாழ்க்கைக்கும் நன்மையைச் செய்யாது. பாவம் விளைதலால் மறுமை உலக வாழ்க்கைக்கும் நன்மையைச் செய்யாது. இந்த உலகத்தில் நம்முடைய செல்வங்களை எல்லாம் விலைமகளின் விலைக்காகப் போகச் செய்து விட்டு, ஒன்றுமில்லாத வறுமைக்கே விதையாக ஆகிவிடும்.

நம் நல்ல மனையாளுடன் கூடிக் காமத்தைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். விலை மகளிருடன் கூடிக் காமத்தைத் தீர்த்துக் கொள்ளக் கூடாது.

வஞ்சம் இலார்க்குத் திருமகள் அருள் உண்ணு

21. நீரும் நிழலும் நிலப்பதியும்[1] நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும் - ஊரும்
வரும்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க்கு என்றும்
தரும்சிவந்த தாமரையாள் தான்.

பாடபேதம்

1. நிலப்பொதியும்

சிவந்த தாமரையாள் தான்:-

சிவப்பு நிறமுடைய தாமரை மலரில் எழுந்தருளியிருக்கும் திருமகளாகிய தான்,

வஞ்சம் இலார்க்கு:-

வஞ்சகம் முதலான தீயகுணங்கள் இல்லாத பற்றற்றவர்க்கு

நீரும் நிலனும் நிலப்பதியும் நெற்கட்டும் பேரும் புகழும் பெருவாழ்வும் ஊரும் வரும் திருவும் வாழ்நாளும் தரும்:-

உண்ணுதற்கு இனிய நல்ல தண்ணீரையும், உறைவதற்குரிய வீடு முதலான நிழல்தரும் இடங்களையும் நிலங்களுக்குத் தலைமையாய் இருக்கும் பேற்றையும் (நிலக்கிழார்), நெல் முதலான தானியங்களின் மூட்டைகளையும், பெருமையையும், கீர்த்தியையும், மெய்ஞ்ஞானத்தை உடைய பெரு வாழ்வையும், வாழ்வதற்கு இனிய ஊரினையும், நாள் தோறும் வரும் வருவாயாகிய செல்வங்களையும், மேற்கூறியவற்றை எல்லாம் இருந்து அனுபவித் தற்கு உரிய வாழ்நாளையும் தரும் என்க.

பெருவாழ்வு என்பது மெய்ஞானப் பெருவாழ்வை யும், வஞ்சமிலார்க்கு என்பது பற்றற்றவரையும் குறிக்கும்.

புறநானூறு 'விட்டோரை விடாள் திரு (358) எனக் குறித்துள்ளதை உணர்க.

இப்பாட்டில் வந்துள்ள உம்மைகள் எண்ணும் மைகளாகும்.

பாடுபட்டுத் தேடிய பணம் தனக்கோ
பிறர்க்கோ பயன்பட வேண்டும்

22. பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து[1] வைக்கும்
கேடுகெட்ட மானுடரே கேளுங்கள் - கூடுவிட்டிங்கு
ஆவிதான் [2]போயினபின் யாரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்.

பாடபேதம்

1. வைத்து
2. போயினபின்பு

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைக்கும் கேடுகெட்ட மானுடரே கேளுங்கள்:-

மிகவும் முயன்று தேடி, தேடிய அப்பொருளைத் தாம் அனுபவியாமல் நிலத்தில் புதைத்து வைக்கும் அக்கேட்டினாலே கெட்டுப்போன மக்களே! நான் சொல்வதைக் கேளுங்கள்,

இங்கு ஆவி கூடுவிட்டுப் போனபின்பு:-

இவ்வுலகத்தில் உங்கள் உயிரானது உங்கள் உடம்பை விட்டுப் பிரிந்து சென்ற பின்பு,

பாவிகாள் அந்தப் பணத்தை அனுபவிப்பார் யார்:-

தேடிய பணத்தை அனுபவிக்க முடியாதபடி பாவத்தைச் செய்தவர்களே! நீங்கள் புதைத்து வைத்த பணத்தைத் திரும்பவும் எடுத்து அனுபவிப் பவர்கள் யாராய் இருப்பர்? அதனை நீங்களே கூறுங்கள் என்றவாறாம்.

விளக்கம்

புதைத்துவைக்கும் என்ற பெயரெச்சத்தைக் கேடு என்கிற பெயரோடு கூட்டிக்கொள்க. அல்லது மானுடரே என்பதிலும் கூட்டிக்கொள்ளலாம்.

நாட்டில் தேடப்படும் செல்வங்கள் எல்லாம், தேடியவர்கள் நன்கு அனுபவித்தற்பொருட்டே ஆகும். அதை அனுபவிக்க விரும்பாமல், புதைத்து விடுவதும், பணப்பெட்டியில் வைத்து முடக்குவதும், செல்வத்தின் பயனை அழித்து விடுவதே ஆகும். இக்கருத்தை யான் இயற்றிய மெய்ப்பொருள் காதையுள்.

'செல்வம் என்பது செலவிடற்காகவே,
சேர்த்து வைப்பதற்கு அன்றே'

என்ற பாடலால் உணர்க.

தேடிய செல்வத்தை முடக்கி வைத்தால் செல்வத்தின் பயன் நாட்டிற்குக் கிடைக்காமல் போகும்.

கேடு கெட்ட என்னும் சொல்லைக் கேட்டினாலே கெட்ட என மூன்றாம் வேற்றுமையாய் விரித்துக் கொள்க. சில சமயத்தில் கேட்டினாலும் உறுதி உண்டாகும். இக்கேடு உறுதியை விளைவிக்காமல் கேட்டினையே விளைவிக்கும் என்க.

ஆவிதான் என்ற சொல்லில் உள்ள 'தானும்' 'யாரே' என்ற சொல்லில் உள்ள ஏகாரமும் அசைகளாகும்.

நாவலர் உரை

பூமியிலே புதைத்து வைக்கப்பட்ட பணம், வைத்தவர் இறந்தபின் அவருக்கு உதவாமல் போவது மன்றிப் புதைத்த இடம் தெரிந்து எடுக்கக் கூடாமையாலே பிறருக்கும் உதவாமல் போகும்.

**அறங்கூறும் அவையின்கண் இருந்து
ஒருபக்கமாகத் தீர்ப்புக் கூறியவர்
வாழ்ந்த வீட்டிற்கு உண்டாகும்
தீங்குகள்**

**23. வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே - மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரம் சொன்னார் மனை.**

மன்று ஓரம் சொன்னார் மனை:-

(மக்களுக்கு நீதி வழங்கும் அரசமன்றங்களில் அதிகாரியாய் இருந்து கொண்டு, அம்மன்றத்திற் குரிய நடுநிலைத் தீர்ப்பை வழங்காமல்) ஒருபால் கோடிய தீர்ப்பை வழங்கியோர் தாம் அடைவது நரகமேயானாலும், தாம் இவ்வுலகில் வாழ்ந்திருந்த வீடும் அழிய.

வேதாளம் சேருமே:-

அவ்வீட்டில் அச்சத்தைத் தரும் வேதாளம் என்னும் ஒருவகைப் பேய் வந்து தங்கும்.

வெள்ளெருக்கு பூக்குமே:-

அவ்வீட்டில் மக்களுக்குப் பயன்தராத வெண்மை யான எருக்கம் பூக்கள் நன்றாகப் பூத்திருக்கும்.

பாதாள மூலி படருமே:-

அழிந்த வீட்டில் ஒருவரும் நடமாட முடியாதபடி பாதாள மூலி என்னும் நெருஞ்சில் நன்கு படர்ந் திருக்கும்.

மூதேவி சென்றிருந்து வாழ்வளே:-

தீயவைகளுக்கு அதிபதியான மூதேவி என்னும் தெய்வம் அவ்விடத்தில் வந்து நிலையாக வாழ்ந்திருக்கும்.

சேடன் குடிபுகுமே:-

கண்டார்க்கு அச்சத்தைத் தரும் பாம்புகள் அங்கே வந்து குடியேறும்.

விளக்கவுரை

மன்றோரம் சொன்னார் வாழ்ந்த மனைக்கே இவ்வளவு தீங்குகள் வருமேயானால், மன்றோரம் சொன்னவர்க்கு வரும் தீங்கிற்கு அளவில்லை என்க.

'சேஷன்' என்கிற வடசொல் 'சேடன்' எவத் திரிந்தது.

சேடன் - பாம்பு.

பாதாள மூலி-பாதாளம் என்பது இங்கு நிலத்தை உணர்த்துகின்றது. அதில் படர்ந்துள்ள மூலி - நெருஞ்சில் முதலான முள்தாவரங்களைக் குறிக்கும்.

ஏகாரங்கள் ஐந்தும் இரக்கப்பொருளில் வந்துள்ளன.

இதற்கு இது இல்லாவிட்டால் அது பாழ் என்பது

24. நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா வுண்டிபாழ்
ஆறில்லா வூருக்கு அழகுபாழ் - மாறில்
உடன்பிறப் பில்லா உடம்புபாழ் பாழே
மடக்கொடி யில்லா மனை.

நீறு இல்லா நெற்றி பாழ்:-

திருநீறு அணியப் பெறாத மக்களின் நெற்றி பொலிவினை இழக்கும்.

நெய்யில்லா உண்டி பாழ்:-

நெய் கலக்கப்படாத உண்ணும் உணவு சுவையையும் பயனையும் இழந்து விடும்.

ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ்:-

மக்களுக்கு உண்ணும் உணவாதலே அன்றி, புறத்தூய்மையையும் தருகின்ற நல்ல நீரைப் பெற்றிராத ஊருக்கு அழகு கெடும்.

மாறு இல் உடன்பிறப்பு இல்லா உடம்பு பாழ்:-

உள்ளத்தால் மாறுபாடு இல்லாத அண்ணன், தம்பி; அக்காள், தங்கை; என்னும் உடன் பிறப் பாளரைப் பெறாத தனிஉடம்பு சிறப்பில்லாத உடம் பாகும். இதனை உலக மக்கள் 'ஓரி' என்று இகழ்வர்.

மடக்கொடி இல்லா மனை பாழ்:-

மடப்பம் முதலான நல்ல பண்புகளைப் பெற்றி ருக்கும் பொற்கொடி போன்ற மனையாள் இல்லாத

வீடு எல்லா வகையாலும் சிறப்பில்லாததாக இருக்கும்.

விளக்கவுரை

'நீரகம் பொருந்திய ஊரகத்திரு'

(கொ. வேந்தன்–51)

'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்பதற்கு மற்றோர் உரை:

ஆறு என்பது வழி. நல்லவழிகள் அமையப் பெறாத ஊருக்கு அழகு பாழ் என்றும் பொருளுரைப்பர்.

படிப்பதற் கோர் பள்ளி இலாப் பாழும் ஊரும்
பாங்குடன்நற் பெருவழிகள் பயிலா ஊரும்
... ...
அவையெல்லாம் ஊரல்ல அடவிக்காடே'

(இது என்னுடைய பாடல்)

வருவாய்க்கு மேலாகச் செலவிடுவோர்க்கு உண்டாகும் தீங்குகள்

25. ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப் - போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு.

ஆனமுதலில் அதிகம் செலவானால்:-

வருவாய் ஆகிய முதற்பொருளைக் காட்டிலும் அதிகமாய்ச் செலவழிக்கும் நிலை ஏற்பட்டால்.

மானம் அழிந்து

பொருள் அழிந்து இல்லாமை ஏற்பட்ட காரணத்தால், பெருமை அழிந்து.

மதிகெட்டு:-

செய்வது இன்னது என்று அறியாமல் அறிவு கெட்டு.

போனதிசை எல்லார்க்கும் கள்ளனாய்:-

சென்று பழகிய எல்லா இடத்தில் உள்ளவர் களுக்கும் பொருள்திருடன் என்று கருதப்பட்டு.

ஏழ்பிறப்பும் தீயனாய்:-

பொருளைப் போற்றாமல் அழித்த பாவத்தால் வரும் பிறவிகள் தோறும் தீமையே புரிபவனாகி.

நல்லார்க்கும் பொல்லானம் நாடு:-

நல்ல பண்புடையவர்களாலும் தீயவன் என்று கருதப்படுகின்ற நிலைமை உடையவனாவன்.

பசியால் கெடுபவை

26. மானம் குலம்கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம்[1] வலிமை தாளாண்மை-தேனின்
கசிவந்த [2]சொல்லியரைக் காதலித்தல் பத்தும்
பசிவந் திடப் பறந்துபோம்

பாடபேதம்

1. தவமுயற்சி
2. சொல்லியர்மேல் காமுறுதல்

பசி வந்திட:-

ஒருவருக்குப் பசியாகிய துன்பம் வந்துள்ள பொழுது.

மானம்:-

பெருமையும்.

குலம்:-

தன்குலத்துக்குள்ள நல்லொழுக்கமும்.

கல்வி:-

கல்வியறிவும்.

வண்மை:-

வள்ளல் தன்மையும்.

அறிவுடைமை:-

நல்லறிவு உடையராதலும்.

தானம்:-

உயர்ந்தோர்க்குச் செய்யும் தானமும்.

தவம்:-

துறவிகளுக்கு உள்ள தவமும்.

வலிமை:-

தம்முடைய வலிமையும்.

தாளாண்மை:-

செயல்களிலே முயலும் முயற்சியும்.

தேனின் கசிவந்த சொல்லியரைக் காதலித்தல் பத்தும்:-

தேனைப் போல இனிய இளகிய சொல்லை யுடைய பெண்களைக் காதலித்தலும் ஆகிய இவை பத்தும்.

பறந்து போம்:-

விட்டோடிப் போகும் என்க.

விளக்கம்

'பத்தும்' என்ற சொல்லில் வந்துள்ள முற்றும்மையை 'ஒரோவழி எச்சமுமாகும்' என்ற விதியால் எச்ச உம்மையாக்கிக்கொண்டு இப்பத்துள் அடங்காத பொருள்களையும் கொள்க (நன்னூல்)

கருத்து

மானம் முதலான எல்லா நலன்களையும் கெடுத்தலினாலே, பசிநோய் மிகக் கொடியது என்க.

எனையாளும் ஈசனை அறிதற்குக் கருவியைக் கூறுகின்றது

27. ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட்டு ஒன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும் - ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்.

கருதது

திருமந்திரத்துள் (504) 'ஆவன ஆவ' என்றார். அதனுடைய வேறுபாட்டை இப்பாட்டு கூறுகின்றது.

ஒன்றை நினைக்கில் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்:-

ஒரு பொருளைப் பெறக்கருதினால் அப்பொருள் கிடையாமல் வேறொரு பொருள் கிடைத்தாலும் கிடைக்கும்.

அன்றி அதுவரினும் வந்தெய்தும்:

வேறொரு பொருளன்றி அப்பொருளே கிடைத்தாலும் கிடைக்கும்.

ஒன்றை நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்:-

இன்னும் ஒரு பொருளைப்பெற வேண்டும் என்று நினையாமல் இருக்கும் போது அப்பொருள் தானே வந்து கிடைத்தாலும் கிடைக்கும்.

எனை ஆளும் ஈசன் செயல்:-

இப்படி ஆவன ஆகும் என்ற ஒரு செயல், மூன்று விதமாய் நடத்தலுக்குக் காரணம் நம் செயல் இல்லை; நம்மை இயக்கும் பரதுரியமாகிய ஈசனுடைய செயலே ஆகும் என்பதை அறிஞர் ஆராய்ந்து உணர்க.

விளக்கம்

இப்பாட்டு நம் உடம்பினுள் மறைந்து வாழும் காயக் கடவுளாகிய இயக்கும் ஈசனை அறிதற்குக் கருவி குறித்துக் கூறுகின்றது.

அறிவிலா மக்களின் சஞ்சல வாழ்க்கை

28. உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடி [1]மிகை எண்ணுவன கண்புதைந்த
மாந்தர் குடில்[2] வாழ்க்கை-மண்ணின் கலம்போலச்
சாந்துணையும் சஞ்சலமே தான்.

பாடபேதம்

1) கோடி நினைத்து
2) குடி வாழ்க்கை

கண்புதைந்த மாந்தர் குடில் வாழ்க்கை:-

அறிவுக்கண் மறைந்து போன மக்கள், உடம்பாகிய குடிலில் அவர்கள் வாழும் வாழ்க்கையைக் கருதிப் பார்த்தால்,

உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்ணுவன எண்பதுகோடி மிகை:-

தாங்கள் உண்பதோ ஒரு நாழி அளவுள்ள அரிசியால் சமைத்த உணவாகும். தாங்கள் உடுப்பதோ நான்கு முழ அளவுள்ள உடையாகும். ஆனால் உண்பது, உடுப்பது பற்றி எண்ணுவனவோ, எண்பது கோடி அளவுக்குமேலாக இருக்கும்.

மண்ணின் கலம்போலச் சாந்துணையும் சஞ்சலமேதான்:

மண்ணால் செய்த கலம் பலவகைச் செயல்களுக்கு உரியதாய் இருந்து கடைசியில் அழிந்து, பயனில்லாமல் ஒழிவது போல, இவ்வுடம்பு அழியும் வரை அம்மக்கள் மனக்கலக்கத்தையே பெறுகின்றார்கள்.

விளக்கவுரை

'சஞ்சலம்' என்ற வடசொல்லிற்கு 'அசைவோடு கூடியது' என்று பொருள்.

'சலம்' - அசைவு,

அறிவுக்கண் மறைந்த மக்கள், தாங்கள் உண்பதும் உடுப்பதும் சிறிதளவாய் இருந்தாலும் அவற்றைறப்பற்றி எண்ணுகின்ற எண்ணம் எண்பது கோடிக்கு மேலாக இருக்கும். அந்த எண்ணச் சுமையால் அவர்கள் சஞ்சலம் அடைந்து கொண்டே இருப்பர்,

கடவுளாகிய ஒரு பொருளைப்பற்றி நினைந்து அமைதியான வாழ்க்கையைப் பெறுதல் அவர்களிடத்தில் இல்லை.

'சஞ்சலமே' - என்பதில் வந்துள்ள ஏகாரம் தேற்ற ஏகாரம்.

'தான்' என்பது 'மாத்திரம்' என்கின்ற பொருள் படைத்த ஒரு இடைச்சொல்.

கொடுப்பவர்க்கு எவரும் உறவினரே

29. மரம்பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் [1]ஏவரும் அங்கு இல்லை-சுரந்தமுதம்
கற்றா தரல்போல் கரவா தளிப்பரேல்
உற்றார் உலகத் தவர்.

பாடபேதம் :–

1. யாவரும்

மரம் பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி இரந்தழைப்பார் ஏவரும் அங்கு இல்லை:-

மரங்கள் பழுக்கத் தொடங்கிவிட்டால், பழுத்த பழத்தைத் தின்னுவதற்கு வருக என்று வேண்டி வெளவாலை அழைப்பவர் எவரும் இல்லை.

கற்றா :-

கன்று + ஆ

கன்று ஆ சுரந்தமுதம் தரல் போல :-

கன்றை ஈன்ற பசு; பாலைச் சுரந்து கன்றுக் குட்டிக்கும், மற்றவர்களுக்கும் அளிப்பதைப் போல.

கரவாது அளிப்பரேல் :-

ஒரு கொடைவள்ளல் ஒளிக்காமல் தம்மவர்க்கும் பிறர்க்கும் கொடுப்பாரேயானால்.

உலகத்தவர் உற்றார்:-

உலக மக்கள் எல்லோரும் வெளவாலைப் போல தானே வந்து அக்கொடையாளிக்கு உறவினராவர்.

விளக்கவுரை

கன்று + ஆ என்ற சொற்கள் கற்றா எனப் புணர்ந்தன.

எவர் என்ற சொல் ஏவர் என நீண்டது.

இது செய்யுள் விகாரம்.

'கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப் படும்.

என்பது குறள்.

விதியின் விளைவு

30. தாம்தாம்முன் செய்தவினை தாமே அநுபவிப்பார்
பூந்தா மரையோன் பொறிவழியே - வேந்தே
[1]ஒறுத்தானை யென்செயலாம் ஊரெல்லாம் [2]ஒன்றர்ய்
வெறுத்தாலும் போமோ விதி.

பாடபேதம்

1. ஒறுத்தாரை

2. ஒன்றா

வேந்தே:-

ஒருவனால் ஒறுக்கப்பட்ட அரசனே!

தாம்தாம்முன் செய்தவினை:-

அவரவர்கள் முற்பிறவியில் செய்த நல்வினை, தீவினைப் பயன்களை.

பூந்தா மரையோன் பொறிவழியே தாமே அநுபவிப்பர்:-

'மலர் உறை மாதவன்' (திருமந்திரம் - 1531) என்ற காயக்கடவுளின் விதிவழிப்படி தாமே அநுபவிப் பார். வினைகளைச் செய்த அவர்களே அநுபவிப்பார் என்பது உலக நியதியாகும்.

ஒறுத்தானை யென்செயலாம்:-

இன்று உன்னை ஒறுத்துத் தீங்கு செய்த ஒரு குடிமகனை நாம் என்ன செய்ய முடியும்?

ஊரெல்லாம் ஒன்றாய் வெறுத்தாலும் விதிபோமோ:-

நீ ஆட்சி செய்யும் நாட்டில் உள்ள ஊர் மக்கள் எல்லோரும் ஒன்றுகூடி உனக்கு வரும் தீங்கை வெறுத்தாலும் காயக்கடவுளின் விதி போகுமோ? போகாது என்க,

விளக்கவுரை

இப்பாட்டு, குடிமக்களுள் ஒருவனால் ஒறுக்கப்பட்ட மன்னனை நோக்கிப் புலவர் கூறிய பொருண் மொழியாகும். மெய்ப்பொருள் நாயனார் வரலாற்றை இவ்விடத்தில் நினைவு கூர்க.

குறிப்பு

இப்பாடல் நல்வழியில் வந்துள்ள எல்லாப் பாடல் களிலும் வேறுபட்டு வந்துள்ளது. இது மட்டும் அரசனை நோக்கிக் கூறுகின்றது. நன்கு கருதினால் ஔவையாரை ஆதரித்த வேந்தன் ஒருவனுக்குத் தீங்கு வந்த காலத்து, ஔவையார் அவ்வரசனுக்கு ஆறுதல் கூறியதாக நமக்குச் செய்தி கிடைக்கின்றது. இப் பாட்டின் கருத்தை அறிஞர் நன்கு உணர்க.

இதனின் இது நன்று என்றல்

31. இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று சாலும்
ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று - [1]வழுக்கில்விடும்
வீரத்தின் நன்று விடாநோய் பழிக்குஅஞ்சாத்
தாரத்தின் நன்று தனி.

பாடபேதம்

1. வழுக்குடைய

இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று:-

இலக்கண வழுக்களை உடைய செய்யுள் நடையைக்காட்டிலும். இலக்கண வழு இல்லாத உரை நடை மிக நல்லது, இதனால் பொருளைத் தெளிவாகக் கூறமுடியும்,

சாலும் உயர்குலத்தின் ஒழுக்கம் நன்று:-

பொருந்திய ஒழுக்கம் இல்லாதவனுடைய உயர் குலப் பிறப்பைக் காட்டிலும், தாழ்ந்த குலத்தானுடைய நல்லொழுக்கம் மிக நன்று. இவ்வொழுக்கம் உயர் குலத்தில் உய்க்குமாதலின் இது நன்றாயிற்று,

வழுக்கில்விடும் வீரத்தில் நன்று விடாநோய்:-

தவறில் தன்னைச் செலுத்தும் வீரத்தைக் காட்டிலும், தவறில் செலுத்தாத நோய் மிக நல்லது,

பழிக்கு அஞ்சாத் தாரத்தில் தனி நன்று:-

பழிச் செயல் செய்வதற்கு அஞ்சாத மனைவி யோடு கூடி இல்லறம் நடத்துவதைக் காட்டிலும், பழிச்செயல் செய்யாத தனி என்னும் துறவற வாழ்க்கை மிகநன்று,

பொருள் சார்பைக்காட்டிலும் அறச்சார்பு உள்ளத்திற்கு ஒளிதரும் என்றது

32. ஆறிடு மேடும் மடுவும்போல் ஆம்செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர்-சோறிடும்
தண்ணீரும் வாரும் தருமமே-சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து.

மாநிலத்தீர் செல்வம் ஆறு இடும் மேடும் மடுவும்போல் ஆம்:-

பெரிய உலகத்தில் வாழும் மக்களே! உங்களால் விரும்பப்பட்ட செல்வம் ஆற்று வெள்ளம் ஆற்றில் செய்கின்ற மேட்டையும், மடுவையும் போன்ற மாறும் இயல்பை உடையது ஆகையால்,

மாறிடும் ஏறிடும்:-

ஒருவர் இடத்தில் இருந்து செல்வம் மாறிவிடும். மற்றொருவர் இடத்தில் சென்று செல்வம் ஏறிவிடும். அக்காரணத்தால்,

தருமமே சார்பாக சோறு இடும் தண்ணீரும் வாரும்:-

பொருளைப் பற்றுக்கோடாகக் கொள்ளாமல், அறத்தையே பற்றுக்கோடாகக் கொண்டு, எளிய வர்க்குச் சோற்றினைக் கொடுப்பீராக. அவர்கள் குடிப்பதற்குத் தண்ணீரும் தருவீராக - இவ்வாறு செய்தால்,

உள் நீர்மை உயர்ந்து வீறும்:-

உங்கள் உள்ளத்தின் தன்மை அன்பாலும், அருளாலும், ஆர்வத்தாலும், நண்பாலும் உயர்ந்து உயர்ச்சி அடைந்து ஓங்கி விளங்கும்,

எனவே, நீங்கள் விரும்புகின்ற பொருளால் உலோபத் தன்மையும் பொய்யும், வஞ்சகமும், பொறாமையும் முதலான தீய குணங்களே உண்டாதலால் உங்கள் உள்ளத்தின் தன்மை ஓங்கி விளங்காது,

'அறனை மறவேல்' - ஆத்திசூடி (30)

குறிப்பு

தவத்திரு இராமலிங்க அடிகளார் இப்பாட்டைப் படித்துவந்த பின்னர்தான் 'தருமசாலை' வைத்தார் என்று அறிஞர் சொல்லுவர்.

இன்சொல்லை வன்சொல் வெல்லாது

33. வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம்
வேழத்தில்
பட்டுருவும் கோல்பஞ்சில் பாயாது-நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்குவிடும்.

வெட்டு எனவை மெத்து எனவை வெல்லாவாம்:-

வெட்டென்ற கடுமையான சொற்கள் மெத்து என்ற மென்மையான சொற்களை வெல்லாவாம்; ஆற்றலால் மெத்தென்ற சொற்களே வெட்டென்ற சொற்களை வென்று விடும் என்று பொருள் கிடைத்தது,

வெட்டென்றவை வெல்லா என்பதற்கு எடுத்துக் காட்டு :-

வேழத்தில் பட்டு உருவும் கோல் பஞ்சில் பாயாது:-

யானையின் மேல் பட்டு ஊடுருவி அப்பால் செல்கின்ற குத்துக்கோல் பஞ்சுப்பொதியில் பாயாது,

மெத்தனவை வெட்டனவை வெல்லும் என்பதற்கு எடுத்துக்காட்டு :-

நெட்டிருப்புப் பாரைக்குநெக்குவிடாப் பாறை பசுமரத்தின் வேருக்கு நெக்குவீடும்:-

நெடிய இரும்பினாலே செய்யப்பட்ட கடப்பாரை என்னும் கருவிக்கு நெகிழாத கருங்கற் பாறையானது தன் விடரில் முளைத்த பச்சை மரத்தின் வேருக்கு நெகிழ்ந்து பிளந்து விடும்,

குறிப்பு

வெட்டெனப் பேசேல் என்பது ஆத்திசூடி (164) அதற்கு இனம் பற்றி மெத்தெனப் பேசு என்பதை அறிஞர் கொள்க.

பொருளுடையவரின் சிறப்பும் பொருளில்லாதவரின் இழிவும்

34. கல்லானே ஆனாலும் கைப்பொருளொன்று உண்டாயின்
எல்லாரும் சென்றங்கு எதிாகொள்வர்-இல்லானை
இல்லாளும் வேண்டாள் மற்றீன்றெடுத்த
தாய்வேண்டாள்
செல்லாது அவன்வாயிற் சொல்.

கல்லானேயானாலும்கைப்பொருளொன்று உண்டாயின் எல்லாரும் சென்றங்கு எதிர்கொள்வர்:-

ஒருவன் சிறந்த கல்வியைக் கல்லாத இழிந்த

வனாய் இருப்பினும், அவன் கைவசமாகப் பொருள் ஒன்றே உள்ளதாயின் எல்லோரும் அவனை வேண்டிச் செல்வதோடு அல்லாமல் அவன் வந்தால் எதிர்கொண்டு வேண்டி அழைப்பர்,

இல்லானை:-

கைப்பொருள் இல்லாத ஒருவனை,

இல்லாளும் வேண்டாள்:

அவனோடு உடன் உறையும் இல்லாளும் வேண்டாள்,

ஈன்றெடுத்த தாய் வேண்டாள்:-

பெற்றெடுத்து வளர்த்த அன்புடைய தாயும் அவனை விரும்பாள்,

செல்லாது அவன் வாயிற்சொல்:-

அவனுடைய வாய்ச்சொல் வீட்டிலும், நாட்டிலும் செல்லாது,

குறிப்பு

கல்லானே என்பதிலுள்ள ஏகாரம் இழிவுப் பொருளில் வந்ததென்க.

மூவகைப் பனிமக்கள் இயல்பு

35. பூவாதே காய்க்கும் மரமுமுள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே-தூவா
விரைத்தாலும் நன்றர்கா வித்தெனவே பேதைக்கு
உரைத்தாலும் தோன்றாது உணர்வு.

பூவாதே காய்க்கும் மரமும் உள:-

பூத்தபின் காய்க்கும் மரங்களே அன்றி, பூவாமலே காய்க்கின்ற அத்தி, பலா முதலான சில மரங்களும் உள்ளன. அவற்றைப் போல,

மக்கள் உள்ளும் ஏவாதே நின்று உணர்வார் தாமுளரே:

மனிதருள்ளும், ஏவிவிட செயல் செய்யும் மக்களே அன்றி, பிறர் ஏவிவிடாமலே, தாம் உணர்ந்து செயல்படும் அரிய மக்களும் உள்ளனர்,

துவா விரைத்தாலும் நன்றாகா வித்தெனவே:-

தூவி விதைத்தாலும், முளைத்துப் பயன் தராத, முளையா விதையைப் போல,

பேதைக்கு உரைத்தாலும் உணர்வு தோன்றாது:-

அறிவில்லாத இழிந்த சில மக்களுக்கு நீ இன்ன காரியத்தைச் செய்வாயாக என்று கூறினாலும் அவர் களுக்கு அந்த வேலையைச் செய்யவேண்டும் என்ற எண்ணம் தோன்றாது,

விளக்கம்

எனவே, ஏவாமல் செய்கின்ற அரிய மக்களும், ஏவிச் செய்கின்ற இடைத்தர மக்களும், ஏவினாலும்

உணர்ந்து செய்யாத இழிந்த மக்களும் என மக்கள் முத்திறப்படுவர் என்க.

''ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போம் அளவும்ஓர் நோய்.'' (திருக்குறள்)

ஏவாமல் செய்பவரை, ''ஏவா மக்கள் மூவா மருந்து'' என்பது கொன்றை வேந்தம் குறிப்பிடும்.

குறிப்பு

விரையை, வித்து என்றும் வழங்குவோம்,

இதற்கு வித்து, விதை, விதைத்தல் என்ற சொற்களை நோக்கினால்,

'விதைத்தாலும் நன்றாகா வித்தெனவே-பேதைக்கு
உதைத்தாலும் தோன்றாது உணர்வு' (என்பாட்டு)

என்று ஒரு பாடம் கொள்ளலாம் போலும்.

அயல் பெண்களை விரும்புவதால் வரும் இழிவு

36. நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறும் காலத்தில்
கொண்ட கருவளிக்கும்கொள்கைபோல்-ஒண்தொடீஇ
போதம் தனம்கல்வி பொன்றவரும் காலம்அயல்
மாதர்மேல் வைப்பார் மனம்.

ஒண்தொடீ:-

ஒளி பெற்ற வளையலை அணிந்த பெண்ணே!

நண்டு:-

ஐம்புல அறிவில் நான்கு அறிவினை உடைய நண்டும்.

சிப்பி:-

இரண்டு அறிவினையுடைய நத்தையும்,

வேய்கதலி:-

ஓர் அறிவினை உடைய மூங்கிலும், வாழையும்,

நாசமுறும் காலத்து:-

தாம் முடிய அழியும் காலத்தே,

கொண்டகரு அளிக்கும்:-

தாம் உட்கொண்ட குஞ்சு, முத்து, நெல், குலை போன்ற கருப்பொருள்களை, உலக நன்மை கருதிக் கொடுக்கும்,

கொள்கை போல்:-

மேலே சொன்ன கொள்கையில் ஒரு புடை ஒப்பாக,

போதம் தனம் கல்வி பொன்றவரும் காலம்:-

ஆறு அறிவுடைய மக்களுள் சிலர் தங்களுடைய அறிவும், செல்வமும், கல்வியும் அழிவதற்கு உரிய பாவம் நிகழும் காலம் வருமாயின்,

அயல் மாதர் மேல் மனம் வைப்பர்:-

தன் மனைவியை விட்டு, வேறு பெண்களை விரும்பி, அவர்களைக் கூடித் தம் விந்துவை வெளிப் படுத்தி அழிவர்,

குறிப்பு

'அவர்களைக் கூடித் தம் விந்துவை வெளிப்படுத்தி அழிவர்' - என்பது இசையெச்சம்,

சிறப்பு

'நண்டு முதலானவை கரு உயிர்த்தலை, அந்த வாய்பாடால் சொல்லாமல், அளிக்கும் என்ற சொல்லால் கூறினார். அவை ஈனும் பொருள்கள். உலக நன்மைக்கு உதவுதலின்,

அயல் மாதர் என்பது, கன்னிப்பெண்களையும், கைம்மைப் பெண்களையும், அயலார் மனைவி முதலானவர்களையும் குறிக்கும்.

பொய்யாப் பொருளை விட்டு
மெய்யாப்பொருளைப் பற்றியவர்க்கு
விதி இல்லை

37. வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலாம்
அனைத்தாய நூலகத்தும் இல்லை-நினைப்பதெனக்
கண்ணுறுவ தல்லாற் கவலைபடேல் நெஞ்சேமெய்
விண்ணுறுவார்க் கில்லை விதி.

நெஞ்சே:-

மனமே!

வினை பயனை வெல்வதற்கு:-

நல்வினை, தீவினை என்னும் இருவினைப் பயனாகிய பிறப்பு, இறப்பு என்னும் சம்சார வட்டத்தை வெல்வதற்கு,

வேதம் முதலாம் அனைத்தாய நூலகத்தும்:-

வேதம் முதலான எல்லா நூல்களையும் ஆராய்ந்தால்,

நினைப்பது என கண்ணுறுவ தல்லால் இல்லை:-

பிறப்பு, இறப்பு என்பது எண்ணத்தின் வழியாய் இயங்கி, எண்ணம் ஒரு பொருளைப் பற்றினால், பிறப்பு, இறப்பினை உண்டாக்கியும்; பற்று ஒழிந்தால், பிறப்பு, இறப்பினைப் போக்கியும்; வருதலின், நினைப்பின் பற்று ஒழிதலே வினைப் பயனை வெல்வதற்குக் கருவியாகும் என அறிந்து பற்றொழிந்து இருப்பதே அன்றி வேறு இல்லை எனக்கருதி,

கவலைப்படேல்:-

கவலைப்படாதே,

மெய் விண்ணுறுவார்க்கு விதி இல்லை:-

(பொய்ப் பொருளுக்கு இடமான பொய் விண்ணாகிய மாயவிண்ணில் பற்று செய்யாமல்.) மெய்ப்பொருளுக்கு இடமாகிய ஞானவிண்ணை ஆராய்ந்து அங்குள்ள சிவத்தைப் பெற்றவர்க்கு நல்வினை, தீவினையால் உண்டாகும் விதி இல்லை என்க,

விளக்கம்

மெய் விண்ணில் உள்ள சிவத்தைப் பெற்றவர்க்கு விதி இல்லை என்பதை எமனை வென்ற மார்க்கண்டேயர் வரலாற்றால் உணர்க.

தான் அதுவாதலும்-அதுவாதலுக்குக் கருவியும் ஆகிய இரண்டையும் இப்பாட்டு கூறுகிறது

38. நன்றென்றும் தீதென்றும் நான்என்றும் தான்என்றும்
அன்றென்றும் ஆமென்றும் ஆகாதே-நின்றநிலை
தான்அதாம் தத்துவமாம் சம்பறுத்தார் யாக்கைக்குப்
போனவா தேடும் பொருள்,

நன்று என்றும் தீது என்றும்:-

உலகத்தினர் கருதும் முறையில் இப்பொருள் நல்லது என்றும், இப்பொருள் கெட்டது என்றும், ஒருபொருளைப் பிரித்துக் கருதும் முறையும்,

நான் என்றும் தான் என்றும்:-

ஒரு பொருளைப் பற்றுச் செய்யும் முறையில் என்னுடையது என்றும், அவனுடையது என்றும் வேறுபடுத்திக் கொள்ளும் முறையும்,

அன்று என்றும் ஆம் என்றும்:-

நீதிநூல் முறைப்படி, விலக்கப்பட்ட தென்றும், விதிக்கப்பட்ட தென்றும், வேறுபடுத்திக் கொள்ளுதலும்; ஆகிய இந்த மூன்று வேற்றுமை உணர்வுகளும்,

ஆகாதே நின்ற நிலை:-

தம் உணர்வில் நிகழாமல், வேற்றுமையற்று நின்ற, பக்குவ நிலையில் தான் இருத்து கொண்டு,

தான் அது ஆம் தத்துவமாம்:-

ஆன்மாவாகிய தான் மெய்ப்பொருளாகிய, அச் சிவமாக ஆகிவிடுதலே உண்மை நிலையாகும்,

சம்பு அறுத்தார்யாக்கைக்குத்தேடும் பொருள் போனவா:

சம்பு என்னும் ஒரு வகைப்புல்லை அறுத்தவர்கள் அதைக் கட்டுவதற்கு அச்சம்பையே யாக்கையாகக் கொண்டாற்போல, அம்மெய்ப்பொருளை அடைவதற்கு அம்மெய்ப் பொருளின் அருளையே கருவியாகப் பெறுவாராக,

சிறப்பு

'சிவமான சிந்தையில் சீவன் சிதைய, (திருமந்திரம் - 2539) என்ற திருமந்திரப்படி, நன்றென்றும், அன்றென்றும் கருதுவதும் நாம்என்றும் தாம்என்றும் கருதுவதும், அன்றென்றும், ஆமென்றும் கருதுவதும் ஆகிய இம்மூன்றும் சீவனுடைய வேற்றுமை எண்ணங்களாதலின் இம்மூன்றும் ஆகாத நிலையில் 'தான்அதுஆகவேண்டும் என்க',

'தான் அதுவாதலுக்கு அப்பரம் பொருளின் அருளையே' கருவியாகக் கொள்ள வேண்டுமாதலின், 'சம்பறுத்தார் யாக்கைக்குப்போனவாதேடும் பொருள்' என்று கூறினார்,

'அவன் அருளாலே அவன்தாள் வணங்கி' எனச் சிவபுராணம் கூறியதை நோக்குக,

நான்என்றும் தான்என்றும் கூறுவதைச் சித்தாந்த சிகாமணி ஸ்வர அஞ்ஞத்தலம் என்று கூறும். ஸ்வபர அஞ்ஞத்தலம் என்னும் சொல் சுவலிங்கத்தலம் என மருவிற்று.

**மூப்பதாம் ஆண்டளவுள் ஒருவன்
ஒப்பற்ற பரம்பொருளை அடைய
வேண்டும்; அடையாவிட்டால்
அவன் கற்ற கல்வியும் அனுபவமுள்ள
மூப்பும் பருவமும் பயன்தரா என்பது**

39. மூப்பதாம் [1]ஆண்டளவுள் மூன்றற்று ஒருபொருளைத் தப்பாமல் தன்னுள் பெறானாயின் - [2]செப்பு கலையளவே ஆகுமாம் காரிகையார் தங்கள் முலையளவே யாகுமாம் மூப்பு.

பாடபேதம்

1. ஆண்டளவில்
2. செப்பும்

மூப்பதாம் ஆண்டளவுள்:-

இளமையும், முயற்சியும் உள்ள மூப்பது வயதுக்குள்,

மூன்று அற்று:-

காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்று குற்றங்களும் நீங்கப்பெற்று,

(அல்லது)

மேல்பாட்டிற்குரிய நன்றென்றும், தீதென்றும் கருதலாகிய ஒன்றும், நான் என்றும், தான் என்றும் கருதலாகிய ஒன்றும், ஆம் என்றும், அன்று என்றும் கருதலாகிய ஒன்றும் ஆகிய இம்மூன்றும் நீங்கப் பெற்று, என்றும் கொள்க,

ஒரு பொருளை:-

'ஒன்றென்றது ஒன்றே கான்' (சிவஞான போதம்) என்ற கடவுள் பொருளை,

தப்பாமல்:-

தவறாமல்,

தன்னுள் பெறுக:-

ஆன்மாவாகிய தனக்குள் ஆராய்ந்து அடையப் பெறுக,

பெறானாயின்:-

மேலே கூறியவாறு இப்பேற்றை முப்பதாம் ஆண்டுக்குள் தன்னுள் அடையானாயின்,

செப்பு:-

அவன் கற்ற கல்வி,

கலையளவே ஆகுமாம்:-

பர ஞானத்தைத் தந்து பயன் தராமையினால் ஏட்டில் எழுதிய அபரஞானமாகிய கலை அளவே யாகும்,

மூப்பு காரிகையார் தங்கள் முலையளவே யாகுமாம்:-

மூப்பதாம் ஆண்டளவுக்கு மேல் வரும், மூப்புப் பருவம், ஒரு பொருளைத் தவறாமல் அடையும் பேற்றைத் தாராமையால் பெண்களுடைய இரண்டு முலையைத் தழுவிப் பெறுகின்ற காம இன்பத்தை அடையும் அளவேயாகிவிடும்,

விளக்கம்

''மூன்றுள குற்றம் முழுது நலிவன
மான்றிருள் தூங்கி மயங்கிக் கிடந்தன
மூன்றினை நீக்கினர் நீக்கினர் நீங்காதார்
மூன்றினுட் பட்டு முடிகின்ற வாறே''

(திருமந்திரம்–2455)

''காமம் வெகுளி மயக்கம் இவைகடிந்து
ஏமம் பிடித்திருந் தேனுக்கு எறிமணி
ஓம் எனும் ஓசையினுள்ளே யுறைவதோர்
தாமம் அதனைத் தலைப்பட்ட வாறே''

(திருமந்திரம்–2436)

மேற் கூறிய இரண்டு பாடல்களுள் முதல் பாட்டு, மூன்று குற்றங்கள் உள்ளன. அவை மயக்கத்தைத் தந்து நலிவனவாகும். அம் மூன்றில் நீங்கினவரே பிறவித் துன்பத்தில் இருந்து நீங்கினவர் என்றும்,

இரண்டாம் பாடல், காமம், வெகுளி, மயக்கம் என குற்றங்கள் மூன்றாகும் என்றும், அவற்றைநீக்கி ஏமம் பெற்றவரே ஓம் என்னும் பிரணவத்துள் உள்ள 'பரந்தாமம்' என்கின்ற உயர்ந்த நிலையை அடைவர் என்றும் கூறுவதைக் கருதுக,

''நல்வழியில் வந்த 'மூன்றற்று' என்பதற்கு மற்றவர் 'மலம், மாயை, கருமம்' என்பர்.''

திருமந்திரத்தின் சிறப்பு

40. தேவர் குறளும் திருநான் மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்-கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம்என்று உணர்

தேவர் குறளும்:-

திருவள்ளுவதேவர் அருளிய திருக்குறளும்,

திருநான் மறை முடிவும்:

சிறந்த நான்கு வேதங்களின் முடிபாகிய உபநிடதங்களும்,

முவர் தமிழும்:-

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்தி ஆகிய மூவர் அருளிச் செய்த தமிழ் வேதமும்,

முனி மொழியும்:-

வியாச முனிவர் எழுதிய பிரம்ம சூத்திரமும் (அல்லது) மௌனசீலரான நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய் மொழியும்,

கோவை திருவாசகமும்:-

மாணிக்கவாசகர் எழுதிய திருக்கோவையுடன் கூடிய திருவாசகமும்,

திருமுலர் சொல்லும்:-

மேலே சொன்னவற்றுடன் கூட்டி எண்ணப்படும் திருமூலரின் திருமந்திரமும் ஆகிய இவை எல்லாம்,

ஒரு வாசகம் என்று உணர்:-

(அறிவுடைய மாணவனே) 'ஒன்றென்றது ஒன்றே காண்' என்ற கடவுள் பொருளை உணர்த்தும் சொற்றொடர் என்பதை உணர்ந்து கொள்வாயாக,

குறிப்பு

ஔவைப்பிராட்டியார் திருமந்திரத்தில் நல்ல ஈடுபாடு உடையவர் என்பதை இப்பாட்டாலும் மேலே வந்துள்ள பல பாடல்களாலும் உணர்ந்து கொள்க.

'திருமந்திரமானது மேற்கூறிய அறிவு நூல்கள் பலவற்றுடன் சேர்த்து எண்ணப்படுகிறது,

இப்பாட்டு திருமந்திரத்திற்கு ஒரு சிறப்புப் பாயிரம் ஆகும்.

நல்வழிப் பாடலும் உரையும்
முற்றும்

நல்வழிப் பாடல்களின் முதனினைப்பு அகரவரிசை

முதனினைப்பு	செய்யுள் எண்	பக்கம்
பாலுந்	காப்பு	1
1. அம்மி	20	40
2. ஆண்டாண்டு	10	21
3. ஆவாரை	13	25
4. ஆற்றங்	12	24
5. ஆறு	9	19
6. ஆறிந்	32	58
7. ஆன	25	48
8. இடும்பை	3	8
9. இழுக்குடைய	31	57
10. ஈட்டும்	8	1
11. உண்பது	28	52
12. உள்ள	6	14
13. எண்ணி	4	11
14. எல்லாப்	7	16
15. ஒருநா	11	23
16. ஒன்றை	27	51
17. கல்லானே	34	60
18. சாதி	2	06
19. சிவாய	15	29
20. செய்தீ	17	36
21. சேவித்துஞ்	19	39
22. தண்ணீர்	16	35
23. தாந்தாமுன்	30	55
24. தேவர்	40	71
25. நண்டுசிப்பி	36	63
26. நன்றென்றும்	38	67
27. நீரு	21	41
28. நீறில்லா	24	47

முதற் குறிப்பு	செய்யுள் எண்	பக்கம்
29. பாடுபட்டு	22	43
30. பிச்சைக்கு	14	27
31. புண்ணியமாம்	1	04
32. பூவாதே	35	62
33. பெற்றார்	18	37
34. மரம்பழுத்தால்	29	54
35. மானங்	26	49
36. முப்பதா	39	69
37. வருந்தி	5	11
38. வினைப்பயனை	37	65
39. வெட்டெனவை	33	59
40. வேதாளஞ்	23	45

பிழைதிருத்தம்

வரிசை எண்	பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	7	15	பிரிதிலோமன்	பிரதி லோமன்
2	11	17	சிறந்தவராகயிருந் தாலும்	சிறவாதவராயிருந்தாலும்
3	12	9	சிறியவனானாலும்	சிறவாதவராயிருந்தாலும்
4	26	8	போகின்றவரையும்	புகுகின்றவரையும்
5	27	3	சற்பாத்திரம்	பாத்திரம்
6	29	21	இதுவே	உபாயம்
7	32	14	இச்சிவப்பிரகாசர்	இச்சிவபிரகாசம்
8	39	5	சரித்தல்	சரணம் – சரித்தல்
9	40	6	நிலையற்ற	நிலைபெற்ற
10	40	21	அம்மித்துணையால்	1 அம்மித்துணையால்
11	62	02	மக்களுளும்	மக்களுள்ளும்
12	68	22	ஸ்வர அஞ்ஞத்தலம்	சுபராஞ்ஞத்தலம்

பேராசிரியர் திரு. அடிகளாசிரியரின் வாழ்வும் பணியும்

(அ. சிவபெருமான்)

தமிழ்நாட்டில் தென்னார்க்காடு மாவட்டம் கல்லக்குறிச்சி வட்டத்தின் தென்கோடியில் வடவெள்ளாற்றின் வடக்குக் கரையில் உள்ளது குகையூர் என்னும் கூகையூராகும் இவ்வூரை இலக்கியங்கள் குகையூர் என்று கூறும். பொது மக்கள் கூகையூர் என்று கூறுவர்.

திருமூல நாயனாருடைய கொள்கையில் பயிற்சியுடைய சித்தநாதர் என்னும் சித்தர் ஒருவர் இவ்வூருக்கு வந்து, ஆற்றங்கரைப் புதருள் தங்கி, சிவயோக சமாதியை மேற் கொண்டிருந்தனர். அவர் அட்டமா சித்தியிலும் வல்லவராய் இருந்தார்.

அவ்வூரை ஆண்டிருந்த குறுநில மன்னனாகிய மாலாங்கன் என்பவன் சித்தநாதருடைய பெருமையை உணர்ந்து தன் மனைவியுடன் வந்து பேரன்புடன் அவர்க்குப் பணிவிடை செய் தொழுகினான். அவ்விருவருடைய பேரன்பினையும் மகப்பேறின்றி மூப்படைந்துள்ள நிலையினையும் உணர்ந்த சித்தநாதர் அவ்விருவரையும் இளமை உடையவராக ஆக்கி, வீரசைவ சமய நெறியை மேற்கொண்டு வாழுமாறு செய்து, பக்குவற்கு உபதேசிக்கும் மாதவக் குருபரனாக மாலாங்கனை ஆக்கினர்.

அம்மாலாங்கனிலிருந்து அவன் பரம்பரை சித்தநாதேச்சுரா தீனமாக ஆயிற்று.

அப்பரம் பரையில் பிற்காலத்தில் பட்டத்துப்பெரியசாமி ஐயர் என்பவர் வளர்ந்து வந்தார். அவர் மனைவி குங்கும அம்மாள் ஆவார். அவ்விருவரும் நன்கு படித்தவர்.

அவ்விருவர்க்கும் கி.பி. 1910–இல் சாதாரணயாண்டு சித்திரைத் திங்கள் ஐந்தாம் நாள் ஞாயிற்றுக்கிழமை தனுர் இலக்கினத்தில் பூசம்நாளில் திரு. அடிகளாசிரியர் முதல் மகனாகப் பிறந்தார். இவரின் பிள்ளைப்பெயர் குருசாமி அய்யர் என்பதாகும். பிற்காலத்தில் தனித்தமிழ் இயக்கத்தலைவர் தவத்திரு மறை மலையடிகளார் கருத்துப்படி திரு. அடிகளாசிரியர் எனப் பெயரை மாற்றிக் கொண்டார்.

இளமைக்காலமும் கல்வியும்

இவர்க்கு ஏழாம் யாண்டில் தந்தையார் காலமாகி விட்டார். இவர் தாயார் குங்கும அம்மாள் என்பவர்தான் இவரைப் பேணிப்புரந்து கல்வி கற்குமாறு செய்தார். பெரம் பலூருக்கு அண்மையிலுள்ள நெடுவாசல் என்னும் ஊர் இவர் தாயார் பிறந்த ஊராகும். தாய்மாமன் இருவராவர். மூத்தவர் திரு. கு. சுப்பிரமணிய தேவர் இளையவர். திரு. கு. சிவப்பிரகாச தேவர் ஆவார். இவ்விருவரும் நன்கு தமிழ் பயின்றவர்கள். மருத்துவக்கலை, சோதிடக்கலை ஆகியவற்றிலும் வல்லவர்கள். அடிகளாசிரியர் இவர்கள் (தாய்மாமன்) வீட்டில் தங்கி, தமிழ்ப் பயிற்சியையும் வடமொழிப் பயிற்சியையும் பெற்றார்.

பெரம்பலூரில் வாழ்ந்த திரு. மருதநாடார் என்பவரிடம் சோதிடக் கலையைக் கற்றுக்கொண்டார். முசிறி அரசினர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராய் இருந்த உயர்திரு. வீ. குமாரவீரையர் என்பவரிடம் நன்னூல் காண்டிகை உரையை மட்டும் முறைப்படி பாடங் கேட்டார். 1937–இல் இவர் தனியாகப் பயின்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் தேர்வெழுதித் தமிழ்ப் புலவர் பட்டத்தைப் பெற்றார்.

மயிலம் கல்லூரியில் பணி

14—7—1983–இல் மயிலம் திருமடத்தில் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி என்ற பெயரால் ஒரு தமிழ்க் கல்லூரி தோன்றிற்று. அக்கல்லூரியில் இவர் முதலாசிரியராக அமர்ந்தார். அக்கல்லூரி பல்கலைக்கழக ஒப்புதல் பெற்றபின் 1—7—41 இலிருந்து 30—11—41 வரை விரிவுரையாளராகவும், 1—12—42 இலிருந்து 1—7—1950 வரை துணைத்தலைவராகவும் அங்குப் பணியாற்றினார்.

கரந்தைத் தமிழ்க் கல்லூரிப் பணி

பின்னர் 3–7–1950 – இலிருந்து 3–7–1970 வரை தஞ்சாவூர் கரந்தைப் புலவர் கல்லூரியில் விரிவுரையாளராகவும், துணை முதல்வராகவும் பணியாற்றினார். 4–4–70–இலிருந்து ஓய்வு பெற்றார்.

ஓய்விற்குப்பின்

சேலம் மாவட்டம் ஆத்தூரில் அமைந்திருந்த தனியார் தமிழ்க் கல்லூரி ஒன்றில் முதல்வராக மூன்றாண்டுகள் பணி யாற்றியுள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் ஆராய்ச்சி யாளராக ஓராண்டு (1977) பணியாற்றியுள்ளார்.

20–1–1982ஆம் நாளிலிருந்து 1–10-1985ஆம் நாள் வரை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சுவடிப் புலத்தில் சிறப்புநிலை இணைப்பேராசிரியராக அமர்ந்து தொல்காப்பிய ஆராய்ச்சியைச் செய்து வந்தார். அதன்பின் மூப்பின் காரண மாகத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பணியிலிருந்து தாமே விலகிக் கொண்டார். மூப்பின் காரணமாகத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பணியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்ட அவர் தம் இல்லத்திலிருந்து அப்பணியை (தொல்காப்பிய ஆய்வுப் பணியை) நிறைவு செய்து வழங்கினார்.

குடும்பம்

இருந்தமிழே உன்னால் இருந்தேன் வானோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்.

என்று தமிழுக்காக வாழ்ந்து வரும் பேராசிரியர் அடிகளாசிரியர் அவர்கள், தம் பிறந்த ஊரிலேயே பிறந்த கூரை வீட்டிலேயே மண்தரையில் இன்னமும் அமர்ந்து இந்த மண்ணோடு இருக்கும் பற்றை நிலைப்படுத்துவார் போல் வளங்குன்றிய வாழ்வே வாழ்ந்து வருகிறார். தமிழ்ப் பணிக்காகவே தம் பொருளா தாரத்தைச் செலவிட்டு, வேண்டுமென்றே வளங்குன்றிய வாழ்வைத் தேடிக் கொண்டவராவார்.

அறிவுசான்ற மூன்று ஆண்மக்களும், அமைதி சான்ற மூன்று பெண்மக்களும் வாசுகி அனைய மனையாளுமே இவரது சொத்துக்களாக உள்ளனர். சிந்தனை செய்தே சிறந்த இவர் உடல் இன்று பலரின் சிந்தனைக்கு உரியதாக உள்ளது. எழுதி எழுதியே முதிர்ந்த இவரது கைகள் எழுத மறுக்கின்றன. நடந்தே சிறந்த கால்கள் நடை தடுமாறுகின்றன. ஆனால் சிந்தனை மட்டும் தடுமாறாமல் தமிழையே இன்றும் சிந்தித்துக் கொண்டிருக்கின்றது. அகவை (91) முதிர்ந்த நிலையில் எந்த ஆசையும் அற்று, தம் நூல்கள் அச்சேறி உலாவர வேண்டு மென்ற பற்று ஒன்றுடன் மட்டுமே இவர் வாழ்ந்துவருகிறார்.

அடிகளாசிரியரின் படைப்புகள்

1. உரைநூல்கள்:

அ. உரைப் பதிப்புக்கள் (உரையோடு விளங்கிய நூல்களைப் பதிப்பித்தல்)

1	அருணகிரி அந்தாதி – சரசுவதிமகால் வெளியீடு	1967
2	மருதூரந்தாதி உரை – சரசுவதிமகால் வெளியீடு	1968
3	காலச் சக்கரம் - சரசுவதிமகால் வெளியீடு (சோதிட நூல்)	1969–79
4	வராகர்ஓராசாத்திரம் (சோதிட நூல்) சரசுவதிமகால் வெளியீடு	1970–81–91
5	சிவஞான தீபம் உரை – சரசுவதிமகால் வெளியீடு	197
6	சிவப்பிரகாச விகாசம் உரை – சரசுவதிமகால் வெளியீடு	1997

ஆ. உரைவரைவுகள் (தாமே உரை எழுதி வெளியிட்டமை)

7	முத்துக்குமாரசாமிப் பிள்ளைத் தமிழ்உரை	1958
8	சேக்கிழார் பிள்ளைத்தமிழ் உரை	1967
9	தமிழகக் கல்வெட்டு விளக்கவுரை (மு. கோவிந்தராசனாருடன் இணைந்து எழுதியமை)	1957–58
10	திருவலஞ்சுழி தேவாரப்பாடல்கள் உரை	1956
11	திருவாசகக்கோயில் திருப்பதிகம் உரை	1981

12	சிவபுராணச் சிற்றுரை	1986–96
13	சதமணிமாலை மூலமும் உரையும்	1990
14	சித்தாந்த சிகாமணி அங்கத்தலத்திரட்டு உரை	1992
15	ஸ்ரீமத்சிவஞான பாலய தேசிகர் திருப்பள்ளி எழுச்சி	1993
16	குதம்பைச் சித்தர் பாடலும் உரையும்	1999

2. பதிப்பு நூல்கள்:

(ஓலைச் சுவடிகளிலிருந்து பதிப்பித்தவை)

17	வீரசைவப் பிரமாணம்	1936
18	சதமணிமாலை (மூலம் மட்டும்)	1938
19	சிவப்பிரகாச விகாசம் (மூலம் மட்டும்)	1939
20	காமநாதர் கோவை	1947
21	மேன்மைப் பதிகம்	1957
22	சதுர்லிங்க தசகோத்திர சதகம்	1968

3. ஆராய்ச்சி நூல்கள்:

23	தொல்காப்பியம்–எழுத்து இளம்பூரணம்	1969
24	'ஐவகையடியும்' என்னும் தொல்காப்பிய நூற்பா விளக்கம் (சென்னைப் பல்கலைக்கழகம்)	1977
25	தமிழ் இலக்கண இலக்கியங்களில் சைவசித்தாந்தம்	1978
26	தொல்காப்பியம்-சொல்–இளம்பூரணம் (தமிழ்ப் பல்கலைக்கழகம்)	1990
27	தொல்காப்பியம்–பொருள்–செய்யுளியல் (தமிழ்ப்பல்கலைக்கழகம்)	1985
28	தொல்காப்பியம்–பொருள்–எட்டு இயல் பட்டும் (தமிழ்ப்பல்கலைக்கழகம்–அச்சில்)	

4. படைப்பிலக்கிய நூல்கள்:

அ. செய்யுள் வடிவம்

29	பிள்ளைப் பாட்டு	1945
30	திருஅரசிலிக் காதை	1948
31	குழந்தை இலக்கியம்	1963
32	சான்றாண்மை (கோப்பெருஞ்சோழன் பற்றியது)	1964-1975
33	சென்னிமலை முருகன் தோத்திரம்	1980

34 அரசியல் இயக்கம் 1981
35 பல்சுவைப் பண்ணத்திப் பாடல்கள்
(குழந்தை இலக்கியம்) 1983
36 அருள்திரு மாரியம்மன் திருப்பதிகம் 1984
37 உளத்தூய்மை 1984–94
38 தண்ணிழல் (திருமுடிக்காரியைப் பற்றிய அரிய இலக்கியம்) 1390
39 மறவர் நத்தக்குன்றமரும் திருமுருகன்
திருவடிப் பாமாலை 1993
40 தொழிலியல் 1993
41 மெய்ப்பொருட் காதை 1995
42 தமிழ் மாண்பும் தமிழ்த் தொண்டும்
(தமிழியக்க வெளியீடு) 1996
43 ஒன்பான் கோள் வணக்கப் பாடல்கள்
(தமிழியக்க வெளியீடு) 1999

ஆ. உரைநடை

44 எங்களூர் 1937
45 தொடக்கப்பள்ளி-நாடகம் 1949
46 வீரசைவ சிவ பூஜாவிதி 1976
47 விலையேற்றமும் வாழும் வழியும் 1984
48 திருமூலரும் பேருரையும் (மகா வாக்கிய ஆராப்ச்சி) 1998
49 காயத்துள் நின்ற கடவுள் 1999
50 தொல்காப்பியச் செய்யுளியல்–ஆராய்ச்சி–அச்சில் 2000

பொருள்முட்டுப் பாட்டினால் முடங்கிக் கிடக்கும் அச்சேறா நூல்கள்

1 குழந்தை இலக்கியம் (தொகுதி மூன்று)
2 கலித்தொகை உரை (குறிஞ்சிக் கலி)
3 பிரபுலிங்கலீலை உரை
4 அடிகளாசிரியரின் சமுதாயப் பாடல்கள்
5 அடிகளாசிரியரின் இலக்கணக் கட்டுரைகள்
6 அடிகளாசிரியரின் இலக்கியக் கட்டுரைகள்
7 திருக்குறள் உரை (133 குறள் வரை)
8 முப்பால்–உரைநடை

குகையூர்த் தமிழ்ச்சங்க நினைவு வெளியீடு - 1

திருமூல ஔவையார் அருளிய நல்வழி மூலமும் உரையும்

உரையாசிரியர் திரு. அடிகளாசிரியர்

பதிப்பாசிரியர் அ. சிவபெருமான்

- *சீவதுரியமாகிய இயற்றமிழும், பாதுரியமாகிய இசைத் தமிழும், சிவதுரியமாகிய நாடகத்தமிழும் ஒன்று சேர இருத்தலின் சங்கத்தமிழ் என்றார்.*

- *நிலவுலகத்தில் பிறந்த மக்களுக்கு வைப்பு நிதியாக வைத்த பொருள் புண்ணியம், பாவம் ஆகிய இரண்டைத்தவிர வேறொன்றும் இல்லை.*

- *கொடுக்கும் பண்பை உடையவர் உயர்ந்த சாதி. கொடுக்கும் பண்பைப் பெறாதவர் தாழ்ந்த சாதி.*

- *ஒருவன் பொருளைப் போற்றி வாழ வேண்டும். போற்றாமல் பொருளை அழித்து வாழ்ந்தால் வரும் பிறவிகள் தோறும் தீமையாளனாகவே பிறப்பான்.*

சபாநாயகம் ஆப்செட், சிதம்பரம் - ✆ : 23040 - சென்னை - ✆ : 4984693, 4661807.